

திருக்கோயில்
டிசம்பர் '90 விலை: ரூ. 3





காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் ஆலய இராஜ கோபுரத் திருப்பணித் தொடக்க விழாவில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு கே.பி. சுந்தசாமி எம்.ஏ. அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமிகு க.சுந்தரம் அவர்களும் கலந்து கொண்டனர். ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் உள்ளார்கள்.

முகப்பு:

கார்த்திகை மகளிருக்கு
சிவபெருமான் திருவருள் புரியும் திருக்காட்சி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D

| மாலை : 32 | திருவள்ளுவர் ஆண்டு 2021 பிரமோதூத ஆண்டு மார்கழி டிசம்பர் 1990 விலை ரூ. 3-00 | மணி : 12 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

ஊர்க்காவலன்
—மாண்புமிகு முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
—ஆணையாளர் திருமிகு வ.இராமதாஸ், ஐ.ஏ.எஸ். அவர்கள்

பலன்தரும் திருமுறைகள்
—நா.இராமமூர்த்தி

பரஞான தீபவிளக்கம்
—அருணாசல அடிமை

விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான் —கோ.சண்முகம், பி.காம்.

திருக்குட நீராட்டுவிழா காணவிருக்கும் திருக்கழுக்குன்றம்.
—புலவர் வேதாசலம்.

குமரகுருபரர் கண்ட குஞ்சிதபாதன்
—நடராசன் அடிமை.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

சித்திரபாரதம்
—செவ்வேள்.


மலைமந்திர் முருகன்
—பேராசிரியர் தேவராசன்.

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த.அமிர்தலிங்கம்.

# ஊர்க்காவலன்



மாண்புமிகு முதல்வர், முத்தமிழ் அறிஞர் **டாக்டர் கலைஞர்** அவர்கள்



''ஊர்க்காவலன்' என்பது அவன் பெயர் மட்டுமல்ல; அந்த ஊருக்கும் காவலன் அவன் தான். பத்தாயிரம் மக்களைப் பாதுகாக்கவும் பரிபாலிக்கவுமான பொறுப்பு அவனிடம் விடப் பட்டிருந்தது. ஒரு நாள் அவன் இல்லம் நோக்கி நூற்றுக்கணக்கான மக்கள் ஆடவரும் பெண்டிருமாகப் பதட்டத்துடன் ஓடி வந்த னர். வந்தவர்களை வாயிற்புறத்தில் அமரச் செய்துவிட்டு வீட்டுக் காவலர், ஊர்க்காவல னிடம் தகவலை அறிவித்தனர். அப்பொழுது தான் உறங்கச் செல்லலாம் என்று படுக்கை அறைக்குச் சென்றவன், செய்தியை கேள்வி யுற்று, ''அடடா தூங்கக்கூட விடமாட்டார்கள் போலிருக்கிறதே!'' என்று முணுமுணுத்தவாறு வாயிற்புறம் வந்தான். பகல்வேளைதான் அது, பிற்பகல்கூட அல்ல. முற்பகல் வேளைதான்! வந்தவர்களை விசாரிக்கத் தொடங்கினான்.

அந்த ஊரைச் சார்ந்துள்ள ஒரு குப்பத்து மக்கள் அவர்கள். குப்பத்துக்கு அருகாமையில் உள்ள மலைக்காட்டிலிருந்து புலியொன்று குப் பத்துக்குள் நுழைந்ததாகவும், எல்லோரும் சேர்ந்து தீப்பந்தங்களை எடுத்துக் கொண்டு விரட்டி விட்டதாகவும், மீண்டும் அந்தப் புலி, குப்பத்துக்குள் நுழையக் கூடுமென்றும், எனவே அதனைக் காட்டுக்குள்ளேயே சென்று வேட்டை யாடிக் கொன்று தங்களையும் தங்கள் குழந்தை குட்டிகளையும் காப்பாற்றுமாறும் அவர்கள் கண்ணீர் கொட்டி, காலில் விழுந்து முறை யிட்டனர். ஊர்க்காவலன் அவர்களுக்குத் தைரியம் கூறியதோடு, அன்றைக்கே அவன் தன் ஆட்களுடன் சென்று அந்தப் புலியைக் கொன்று தீர்ப்பதாகவும் உறுதி கூறி அனுப்பி வைத்தான்.

மறுநாள் காலையில் சிற்றுண்டி அருந்தும் போது ஊர்க்காவலனின் துணைவி அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''நேற்று வாக்களித்தபடி அந்தப் புலியைக் கொன்று குப்பத்து மக்களைக் காப்பாற்றி விட்டீர்களா?''

அவன் விடையளித்தான்.

''இல்லை, நேற்று வேறு ஒரு அலுவல் எனக்கு, அதனால் இன்றைக்குச் செல்கிறேன் வேட்டைக்கு!''

''அய்யோ, அந்த மக்கள் எவ்வளவு நடுக் கத்தில் இருக்கிறார்கள். இதில் போய் நாளைக் கடத்தலாமா? உடனே அவர்களைக் காப் பாற்றுங்கள்'' என்று அவள் அவனிடம் கேட்டுக் கொண்டாள். அவனும் 'நிச்சயமாக' என்று கூறிவிட்டுச் சிற்றுண்டி முடித்து எழுந்தான். தன் தாய்க்கு உடல் நலமில்லை-போய்பார்த்து விட்டு மறுநாள் காலையில் வந்துவிடுவதாக அவன் மனைவி அவனிடம் அனுமதி கேட்டாள். அவன் சரியென்று தலையசைக்கவே அவளும் புறப்பட்டுச் சென்றாள். கூறியவாறு மறுநாள் காலையில் திரும்பி வந்தாள். கணவன் தூங்கிக் கொண்டிருந்தான். பெருமுயற்சி செய்து அவனை ஒருவாறு எழுப்பினாள்.அவன் எழுந்த வுடன் அவள் கேட்ட முதல் கேள்வி ''அந்தக் கொடிய புலியைக் கொன்றுவிட்டீர்களா?'' என்பதுதான். ''அடடே! அந்த விஷயத்தை



மறந்தே போய்விட்டேன்'' என்று அவன் சொன்ன பதில் கேட்டு அவள் பதறிப் போனாள்.

''என்ன இது? நேற்று முன்தினமே செய்திருக்க வேண்டிய காரியம், அதையும் காலம் கடத்தினீர்கள். நேற்று போயிருப்பீர்கள் என நினைத்தேன். தூங்கிக் கொண்டு இருந்தீர்கள். இன்று கேட்கிறேன். மறந்துவிட்டதாகச் சொல்கிறீர்கள்! உங்களை நம்பியிருக்கும் மக்களுக்கு இப்படியா தொண்டாற்றுவது? சரி, சரி இப்போதாவது புறப்படுங்கள். உடனே புறப்படுங்கள்'' என்று உரக்கக் கூறினாள் அவள். ''இப்போது என்னால் முடியவே முடியாது. அவ்வளவு சோம்பலாக இருக்கிறது. மாலையில் போகிறேன்'' என்று மீண்டும் சுருண்டு படுத்துக் கொண்டான் அந்த ஊர்க்காவலன்.

மாலையில் மனைவியின் தொல்லை தாங்கமுடியாமல் புலி வேட்டைக்கான கருவிகளுடனும் ஆட்களுடனும் கிளம்பினான். காடு நோக்கிச் செல்வதற்கு முன்பு அந்த குப்பத்திற்குச் சென்று மேலும் சில விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்பினான்.


குப்பத்திற்குள் நுழைந்தபோதுஅங்கிருந்த மக்கள் அவனை வெறுப்போடு பார்த்தார்கள். சிலர் அலட்சியப்படுத்தினார்கள். அவன் ஒரு இடத்தில் நின்று கொண்டு அனைவரையும் அழைத்தான். குப்பத்து மக்கள் அவனைச் சூழ்ந்து திரண்டனர். ''உங்கள் வேண்டுகோளின்படி புலி வேட்டைக்குப் புறப்பட்டு விட்டேன்'' என்றான். கூட்டத்தில் அழுகையுடன் கூடிய சிரிப்பொலி எழுந்தது. அந்தச் சிரிப்பு வெறிச்சிரிப்பாக இருந்தது. ஒரு மூதாட்டி அவனுக்கு எதிரே வந்தாள்.

''நீ ஊர்க்காவல் புரிகிற அழகே அழகு! உன்னிடம் நாங்கள் முறையிட்ட பிறகு இந்தக் குப்பத்தில் புலிக்கு இரையான குழந்தைகள் மூன்று! இதோ பார் அருமைச் செல்வங்களை இழந்து நிற்கும் வேதனை உருவங்களை! உன் ஊர்க்காவல் எங்களுக்குத் துணை புரியாது என்று தெரிந்து கொண்டோம். நீ எதிலும் காலம் கடத்துபவன். மறதியின் வடிவம். சோம்பலின் சுரங்கம். தூக்கத்தில் மன்னன். உன்னால் எங்களைக் காப்பாற்ற முடியாது என்று உணர்ந்தோம். நாங்களே ஒன்று திரண்டு புலியை வீழ்த்திவிட்டோம். தேவையானால் உன் ஆட்களை வைத்து அதன் தோலை உரித்துக் கொண்டு போ!

அதன் நகங்களை வெட்டிக் கொண்டுபோ" எங்கள் குழந்தைகளின் குருதியில் மூழ்கிய அதன் பற்களைப் பிடுங்கிக் கொண்டு போ!'' என்று ஆவேசமாகப் பேசினாள். ஊர்க்காவலன் குனிந்த தலை நிமிரவில்லை. வெட்கம் நெஞ்சினைத் தாக்கவே யாரிடமும் பேசாமல் அடிமேல் அடிவைத்து நடந்து அந்தக் குப்பத்தை விட்டு அகன்றான். அதனால்தான் வள்ளுவர் சொன்னார்; காலம் தாழ்த்தல்-மறதி,சோம்பல், அளவு மீறிய உறக்கம் ஆகிய நான்கும், கெடுகின்ற இயல்பு படைத்தவர்கள் விரும்பி ஏறுகிற மரக்கலமாகும் என்று. இதோ குறள்.

''நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்''.

**நன்றி :**
**மாண்புமிகு முதல்வர் அவர்களின் 'குறளோவியம்'**



# அறம்பாவம் என்னும்



ஆணையாளர்
திருமிகு வெ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.

கர்மா என்றாலும், வினை என்றாலும் ஒன்று தான். ஆன்மா செய்யும் கர்மாவே அதன் பல்வேறு பிறப்புக்களுக்கும், இன்ப துன்பங்களுக்கும் அடிப்படையாகின்றது.

''இருவினை இன்பத் துன்பத்திவ்வுயிர்
பிறந்திறந்து வருவது போவதாகும்''

என்பது சிவஞான சித்தியார்.

எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்புகளை எடுத்து எண்ணில்லாத காலமாகப் பிறந்து இறந்து மாறிமாறி வந்து இளைப்புற்றேன் என்று கூறும் மாணிக்கவாசகர் ஆன்மா பிறந்துழலும் பிறவிகளை

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக் மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராய் முனிவராய் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்.'

என்று பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அளவிட்டு இத்துணையென்று அறுதியிட்டுக் கூறினாலும் கூறிவிடலாம். ஆனால் நாம் பிறந்த பிறப்பை எண்ணி அளவிட முடியாது என்கிறார் அருணகிரிநாதர்.

''எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்''

என்பது திருப்புகழ்.

ஒவ்வொரு பிறவியிலும் நாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் ஒருங்கு கூட்டினால் பாற்கடல் சிறிதாகி விடும் என்கின்றார் குருநமசிவாயர்.

''எடுத்த பிறப் பெல்லாம்
எனக்கு எந்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்தும்
கூட்டின்—அடுத்து வரும்
பன்னா கணைத்துயிலும்
பாலாழியும் சிறிதாம்
மன்னா சிதம்பர தேவா''

என்பது குருநம சிவாயரின் சிதம்பரவெண்பா.

தாம் முன்னம் பிறந்த பிறவிகளை எண்ணி முடியாது என்பதைப் பட்டினத்தடிகள்

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனைப் பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னம் எத்தனை எத்தனை ஜென்மமோ
மூடனாய் அடியேன் ஒன்றும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை ஜென்மமோ
என்செய்வேன் கச்சி ஏகம்ப நாதனே''.

என்று நொந்துருகிப் பாடக் காண்கிறோம்.

உலகில் சிலர் பிறக்கும்போதே செல்வக் குடும்பத்திலே பிறக்கிறார்கள். பலர் வறியவர்களாய்ப் பிறக்கிறார்கள். சிலர் உடல் குறை உள்ளவர்களாய்ப் பிறக்கிறார்கள். சிலர் செல்வாக்குள்ள சாதிக் குடும்பங்களில் பிறக்க, சிலர் தாழ்த்தப்பட்ட குடும்பங்களில்பிறக்கிறார்கள். சிலர் அடுத்தடுத்து முயன்றாலும் காரியங்கள் முடிவதில்லை. சிலர் முயலாமலே எளிய முயற்சியில் காரியங்கள் கைகூடிவிடுகின்றன. இவற்றுக்கெல்லாம் சூழ்நிலைகளே காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் இவ்வாறான சூழ்நிலைகள் அமைவதற்கான காரணமும் வேறொன்று உள்ளது. அதைத்தான் வினை அல்லது கர்மா என்று குறிப்பிடுகிறார்கள் மெய்விளக்க அறிஞர்கள்.

ஓர் ஆன்மா இன்ன பிறவியில் பிறக்க வேண்டும். இன்ன இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும். இன்னன்ன நோய்கள் அனுபவிக்க வேண்டும். மூப்பு, சாக்காடு முதலானவைகளும் இன்னின்ன காலத்தில் அவ்வான்மாவை வந்து சேரும் என்பதாக விதிப் பலன்கள், கருவுள் அவ்வுயிர் இருக்கும் போதே எழுதப்பட்டு விடுகின்றன என்பதையும் சிவஞான சித்தியார் எனும் சைவ சித்தாந்த நூல் தெளிவுபடுத்தக் காண்கிறோம்.

# அருங்கயிற்றால் கட்டி...



''பேறு இழவு இன்பமொடு பிணி
மூப்புச் சாக்காடு என்னும் ஆறும் முன்
கருவுள் பட்டது'' என்பது சிவஞான
சித்தியார்.

கர்மா, வினை, தலைவிதி, ஊழ்வினை என்றெல்லாம் இவற்றை நம் இலக்கிய நூல்களும், மெய்ஞ்ஞான நூல்களும், நீதி நூல்களும் ஏற்றுக் கொண்டு விரிவாகப் பேசுகின்றன.

''ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்''.

என்று திருவள்ளுவர் ஊழ்வினையின் வலிமையைப் பேசுகின்றார்.

''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில்தான் இளங்கோவடிகள் ''சிலப்பதிகாரம்'' எனும் சிறந்த காவியத்தையே பாடியுள்ளார்.

பல பசுக்கள் நிறைந்துள்ள மந்தையில் தாய்ப்பசுவைக் கன்றானது தேடி எளிதில் கண்டுபிடித்து சென்றடைவதைப் போலவே ஊழ்வினையும் தனை உடைய ஆன்மாவைச் சென்று சேர்கிறது என்பதை நாலடியார் எனும் நீதிநூல்

''பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் —
தொல்லைப்
பழவினையும் அன்னதகைத் தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு''

என்று கூறுகிறது.

கம்பரும் தம் இராமாயணத்தில் இராம பிரான் வனவாசம் சென்றதற்குக் காரணம் விதியே யாவதை

''நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை
அற்றே
பதியின் பிழையன்று பயந்துநமைப்
புரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று
மைந்த!
விதியின் பிழைநீ இதற்கென்னை
வெகுண்ட தென்றான்''

என்று கூறக் காண்கிறோம்.

பட்டினத்தடிகளைக் கள்வர் எனத் தீர்மானித்துக் கழுமரம் ஏறச் சொல்லியபோது வினையாற் இத்துன்பம் விளைந்தது என்பதை

''என்செயல் ஆவது யாதொன்றுமில்லை
இனித்தெய்வமே
உன்செயல் என்றுணரப் பெற்றேன் இந்த ஊன்
எடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை
பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து
மூண்டதுவே''

என்று பட்டினத்தார் பாடியிருக்கக் காண்கின்றோம்.

கர்மவினை, நல்வினை, தீவினை எனவும் (புண்ணியம், பாவம் எனவும்) இருவகைப்படுகிறது. பிற உயிர்களுக்கு நன்மை செய்வது புண்ணியமாகும். தீமை செய்வது பாவம் ஆகும். புண்ணியம் செய்தவர்களுக்கு நல்ல தான பலன்களையும், பாவம் செய்தவர்களுக்

குத் தீயதான பலன்களையும் கூட்டுவிக்கிறான் இறைவன்.

''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்
தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.''

என்பது திருக்குறள். தசரதர் வேட்டையாடச் சென்றபோது சுரோசனன் என்ற முனிகுமாரனைக் கொன்ற பாவமே, இராமரைப் பிரியும் துன்பத்திற்குக் காரணம் ஆனதை இராமாயணம் கூறுகிறது. ஒருவர் இறக்கும்போது அவர்களுடைய செல்வமோ மற்ற சொந்த பந்தங்களோ சேர்ந்துடன் வருவதில்லை. அவரவர் செய்த புண்ணிய பாவங்களே இறந்தபின்னும் கூட வரும் என்பதைப் பட்டினத்தார்

''பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே'' என்று கூறுகிறார்.

நல்வினை, தீவினை என்று வினையை இரண்டாகக் கூறுவதுபோலவே, அது ஆன்மாவை வந்தடையும் தன்மையை நோக்கி (1) ஆகாமியம் (2) சஞ்சிதம் (3) பிராரத்தம் என்று மூன்றாகவும் வகைப்படுத்திக் கூறுகின்றனர்.

ஓர் ஆன்மா நல்லனவும் தீயனவுமாக, இப்பிறவியில் செய்யும் வினைகள் ஆகாமியம் என்ற பெயர் பெறும். சென்ற பல பிறவிகளில் செய்த வினையின் பலாபலனை இப்பிறவியில் அனுபவித்துத் தீர்க்க வருவது பிராரத்த வினையாகும். பல பிறவிகளிலும் செய்த வினைகள் ஆன்மா அனுபவிக்க தொகுப்பாகச் சேர்ந்து கொண்டு வருவது சஞ்சித வினையாகும். இவ்வாறு வினையை ஆகாமியம், பிராரத்தம், சஞ்சிதம் என்று மூன்றாக வகைப்படுத்திக் கூறுகின்றனர்.

கர்மாவின் இம்மூன்று வகையினை நாம் எளிதாக விளங்கிக் கொள்ளும் வகையில் பயிர் விளைச்சலோடு ஒப்பிட்டு ஒரு உவமையைக் கூறி விளக்குகிறார் கோவை கிழார் சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் கீழ்க் கண்டவாறு:

''நான் செய்த முயற்சியினால் எனக்குப் புதிய பயிர் விளைந்ததல்லவா! இதுபோல உலகில் நாம் செய்யும் முயற்சியால் புதிய வினைகள் வரும். இங்ஙனம் வருவது ஆகாமியம் எனப்படும். இங்ஙனம் விளைந்த பயிரில் கொஞ்சம் அப்பொழுதே உணவாக எடுத்து உண்கிறேன் அல்லவா! அதுதான் பிராரத்தம் எனப்படும். கொஞ்சத்தை எடுத்து அடுத்த விளைச்சலுக்கு உதவும் என்று விதையாகச் சேமித்து வைத்தேன் அல்லவா! அதுதான் சஞ்சிதம் எனப்படும். நான் முன் செய்த வினையினையும் அதன் பலனாக இப்போதுள்ள பிறவி எடுத்து அனுபவிக்கிறேன். அவ்விதம் அனுபவிக்கையில் வேறு வினையையும் செய்கிறேன். அதனை அனுபவிக்க மறுபிறவியும் எடுப்பேன். ஒவ்வொரு விளைச்சலிலும், விதைக்காகக் கருத்தூன்றிச் சேமித்து வைத்த விதைநெல் அதிகமாக இருப்பது போல, ஒவ்வொரு பிறவியிலும் செய்து அனுபவித்து மிச்சமாகச் சேமித்து வைத்த சஞ்சிதவினை மிக அதிகமாகப் பெரும்பாரமாகத் தேங்கி இருக்கும். இந்த மூன்றும் நானே செய்து கொண்ட வினை. ஆகையினாலே இதனை நான் அனுபவித்தே தீரவேண்டும்''.

என்று அவர் விளக்கியிருக்கக் காண்கிறோம். இதையே சிவஞான சித்தியாரும்

''மேலைக்கு வித்துமாகி விளைந்தவை உணவுமாகி
ஞாலத்து வருமா போல நாம் செயும் வினைகள் எல்லாம்''.

என்று விளக்கக் காண்கிறோம்.

ஞானிகள், முனிவர்களாயினும் செய்த கர்மாவின் பலனை அனுபவித்தே தீர வேண்டும். ''இராமதாசர் என்ற சிறந்த திருமால் அடியார் பன்னிரு வருடங்கள் சிறையில் இருந்து வேதனையுற்றார் ஏன்? முற்பிறப்பில் ஒரு கிளியைப் பற்றிச் சிறகையரிந்து பன்னிரண்டு நாட்கள் கூட்டில் அடைத்து வைத்தார். அவ்வினைமூண்டு மறுபிறப்பில் பன்னிரு ஆண்டுகள் சிறைத்துன்பம் உற்றார். ஆதலால் அவரவர் செய்த வினை அவரவரைச் சாரும்'' என்று டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் தம் விரிவுரை விருந்து நூலில் விளக்கக் காண்கிறோம். இராமகிருஷ்ண பரமஅம்சர் இரமணமகிரிஷி போன்ற மாமுனிவர்களும் கர்மாவின் பலத்தால் நோயுற்று வாடினர் என்பதை அவர்தம் வரலாறுகளில் அறிகிறோம்.

உடம்பு இருக்கும்வரை வினை செய்து கொண்டு தானே இருப்போம். அவ்வாறானால் ஆகாமியம் வளருமல்லவா? ஆகாமியம் சஞ்சிதமாகச் சேரும் அல்லவா! அவ்வாறு சேரும் சஞ்சிதத்தில் ஒரு பகுதி பிராரத்தமாக அனுபவிக்க மீண்டும் பிறப்பு வருமல்லவா! அவ்வாறானால் வினை சேராத வண்ணம் தடுப்பது எவ்வாறு? பிறப்பு மீண்டும் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்றும் நாம் ஆய்வு செய்து தெளிந்து கொள்ள வேண்டும்.

ஆகாமியம் ஏறாதபடி பிராரத்தை அனுபவிக்கும் வழியை அறிந்து கொண்டால் எடுத்த உடம்புடனே பிராரத்தம் அழியும். அதற்கு உபாயம் இறைப்பணி புரிதல். ஏழை, எளிய வறியவர்க்கு உதவுதல் முதலியவாகும். ''நான் செய்கிறேன். இது எனது செயல்'' எனும் தன் முனைப்பின்றி இறையருளே எல்லாம் என்ற உணர்வில் செயல்பட்டால் ஆகாமியம் ஏறாது. ஆகாமியம் ஏறாதபோது சஞ்சிதமும் ஏறாது. முன்னைப் பல பிறவிகளில் செய்த சஞ்சித வினையும் குரு செய்யும் தீக்கையினாலே வறுக்கப்பட்ட விதை முளைப்பதற்குப் பயன்படாதவாறு போல பிறப்புக்குக் காரணமாகாமல் அழிந்து போகும். இவ்வுடலுடனே பிராரத்த வினையும் முழுவதுமாக அனுபவித்துக் கழிந்து போவதால் மூவகை வினையும் அவற்றின் வாசனையும் அறவே நீங்கிப் போவது திண்ணம். இதை விளக்கும் விதமாக கோவைகிழார் ''சிவஞானம்'' எனும் நூலில் எடுத்துக்காட்டும் விளக்கக்கதை ஒன்று பின்வருமாறு:—

''ஒரு துறவி கங்கைக்கரையில் தவம் செய்து கொண்டிருந்தார். வேனிற்காலம் வந்தது. கங்கையில் நீர் குறைந்தது. மணல்வெளி அதிகமாகி வெய்யில் சுடத்தொடங்கியது. துறவி பகலில் நீராடச் சென்றார். கால் அடி சுட்டது. அங்கே ஒரு மரத்தடியில் ஒரு தாழ்த்

தப்பட்டவர் செருப்பை வைத்துவிட்டு நீராடச் சென்றிருந்தார். துறவி வெயிலின் கொடுமை தாளாமல் தாழ்த்தப்பட்டவர் செருப்பைத் தாம் அணிந்து சென்றபடியால் அப்பாவத்தின் காரணமாக மறுபிறவியில் துறவி தாழ்த்தப்பட்டவரின் மகனாகப் பிறக்க நேர்ந்தது.

அக்காலத்தில் ஊர்க்காவல் தொழிலும் தாழ்த்தப்பட்டவருக்கு உண்டு. ஆகவே அவருக்கு மகனாகப் பிறந்த துறவி தாமும் ஊர்க்காவல் புரிந்தார். ஊர்க்காவல் புரியும்போது ஒவ்வொரு யாமத்திலும் ஒவ்வொரு நீதி வாக்கியத்தைக் கூறிப் பறை அடித்துச் சென்றார். அவர்தம் நீதிவாக்கியத்தைக் கேட்டு மகிழ்ந்த அரசன் நூறு பொன் பரிசு அளித்தான். மகனாகப் பிறந்த மகான் அப்பரிசைத் தம் தந்தைக்குக் கொடுத்து முற்பிறவியில் அவர் அனுமதியின்றிச் செருப்பு எடுத்த கடனுக்காக அதை எடுத்துக்கொள்ளும்படி கூறிக் கொடுக்க, அவருடைய முன்பிறவி வினை தீர்ந்து அவர் முத்தி பெற்றார்.''

இது வினையின் வலிமையை வெல்லவழி கூறும் கதை. இக்கதையில் துறவி செய்த ஒரு தவறால் வினைக்கு வித்து ஏற்பட்டுவிட்டது. அதை அனுபவித்துப் போக்குகிறார் துறவி. பறையடித்ததால் வந்த பரிசுப் பொருளைத் தமக்கெனக் கொள்ளாததால் விடுதலை கிடைத்தது என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இக்கதையில் காணும் துறவியைப் போல யான் எனது எனும் செருக்கின்றி வாழக் கற்றுக் கொண்டால் வினைகள் யாவும் மாய்ந்து போகும் என்தை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இறைவன் ஒரு அரசனைப் போலவும், மருத்துவன் போலவும், உயிர்கள் தாம் செய்த வினையின் பயனைத் தாமே அனுபவித்து தீர்த்துக் கொள்ளும் வண்ணம்செயல்படுத்துகிறான். ஒரு நோயாளி சுகம் அடையும் பொருட்டு மருத்துவர் ரணசிகிச்சையும் செய்கிறார். சில நோய்களுக்கு இனிப்பு மருந்தும் வழங்குகிறார். ஒரு திருடன் நல்ல நடத்தை பெறும் பொருட்டு அரசர் தண்டிக்கிறார். சிறப்பான செயல்புரிந்தவர்களுக்குப் பரிசுகளும் வழங்குகிறார். அவை போலவே இறைவன் ஆன்மா செய்த நல்வினை தீவினைக்கு ஏற்பப் பிறவிகளைத் தந்து, இன்ப துன்பங்களைத் தந்து அவ்வான்மாவே தம் வினைப் பயனை நுகர்ந்து தீர்த்துக் கொள்ளுமாறு அருள்புரிகிறார்.

''ஆகையால் அவனி மன்னன் அருமறை முறை செய்யாரை
ஆணையின் தண்டம் செய்தும் அருஞ்சிறை இட்டும் வைப்பன்
ஆணையின் வழிசெல் வோருக் கருபதி செல்வம் நல்கி
ஆணையும் வைப்பன் எங்கும் ஆணையே ஆணைகாண்''.

''மண்ணுளே சில வியாதி மருத்துவன் அருத்தி யோடுந்
திண்ணமாய் அறுத்துக் கீறித் தீர்த்திடும் சில நோயெல்லாம்
கண்ணிய கட்டிப் பாலும் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்ப துன்பம் அருத்தியே வினை அறுப்பன்''.

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட்களும் விளக்கக் காண்கிறோம்.

கொடிய வினைகளை இறைவனாலும் குறைக்க முடியாதா அல்லது அழிக்க முடியாதா என்றால் முடியும். இறைவழிபாடும், இறைத் தொண்டும் வினைகளை வேரறுக்கின்றன. வினையினால் உண்டாகவல்ல தீயபலன்களை அறவே இலையாக்க இறைவன் ஒருவனாலே நிச்சயம் முடியும்.

''மாமயிலோன்
கால்பட்டழிந்தது இங்கு என்தலைமேல் அயன்
கை எழுத்தே''.

என்பார் அருணகிரிநாதர்.

''சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்ன சிவகதி தானே''.

''கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே''.

என்பன திருமந்திரப் பாடல்கள். இறைத் தொண்டால் வெவ்வினை அகற்றலாம் என்பதைத் திருஞான சம்பந்தரும்

''அவ்வினைக் கிவ்வினை என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழலடி போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறாதிரு நீலகண்டம்''.

என்று மிக அற்புதமாகப் பாடியுள்ளார். ஔவையாரும்

''சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை, உபாயம்
இதுவே மதி ஆகும் அல்லாத எல்லாம்
விதியே மதிஆய் விடும்''.

என்று இறைவன் திருநாமத்தைச் செபிப்பது ஒன்றே விதியை வெல்லும் வழியாகக் கூறி இருக்கக் காண்கிறோம். விண்முட்ட விறகுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தாலும் வெந்தீ அவற்றை உண்டு சாம்பலாக்கி விடக் காண்கிறோம். அதைப்போலவே கொடியதானவினை எவ்வளவு நாம் சேர்த்திருந்தாலும் நமசிவாய மந்திரத்தால் அறவே இலையாகி மறையும் என்பதை அப்பரும்

''விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணியப் புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச் சிவாயவே''.

என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆகவே எல்லாம் இறையருள் என்ற பரம்பொருள் உணர்வோடு பற்றற்று மெய்த் தொண்டு புரிந்து வாழும் அடியார்க்கு வினைகளும் இல்லை, வினைகளால் தொடர்வதான பிறவிகளும் இல்லை.

திருச்சிற்றம்பலம்.

— — — — —

# பலன்தரும் திருமுறைப் பதிகங்கள்

திருமுறைத் தொண்டர் நா. இராமமூர்த்தி

கடவுளை நம்பினோர் கைவிடப்படுவாரா? ஒருபோதும் இல்லை. நிச்சயம் கடவுள் கை கொடுப்பார்.

நம்மையெல்லாம் படைத்துக் காத்து, ஆளும் கடவுளுக்கு நமக்கு என்னென்ன தேவை என்பது நிச்சயம் தெரியும், விடாமுயற்சியுடனும், முழுநம்பிக்கையுடனும் நாம் வேண்டினால் ''வேண்டியவை வேண்டியவாறு ஈவான் கண்டாய்'' என்றவாறு அவரை உள்ளன்போடு வேண்டினால் நமக்கு வேண்டியனயாவும் கிட்டும்.

''வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்டமுழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாலுக்கு அரியோய் நீ
வேண்டி என்னைபணி கொண்டாய்
வேண்டி நீ யாதருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே''

என்பது திருவாசகம்.

''பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்'' என்ற நூலைப் படித்துபலனடைந்த பல அன்பர்களில். ஒரு சிலரின் உண்மையான, மனப்பூர்வமான கருத்துக்களைக் கூறுகிறேன்.

திருமதி சி. சகுந்தலா சாயிநகர், சின்மயா நகர் அருகில் சென்னையிலிருந்து எழுதுகிறார்.

''எந்த ஒரு காரியத்தை செய்யும்போதும் மனதில் சந்தேகமின்றியும் நம்பிக்கையுடனும் செய்தால் கட்டாயம் நல்ல பலன் உண்டு. ஒரு சோதனை வருங்கால் பகவானிடம் முழுநம்பிக்கையுடனும், பக்தியுடனும் வேண்டினால் நலனும் நன்மையும் அடையாமல் இருக்கமுடியாது. நால்வர் பெருமக்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்களுக்கெல்லாம் எவ்வளவு விதத்தில் அருளை வாரி வழங்கி வேண்டியதை வேண்டியவாறே ஈசர் அருளினார் என்பதை நாம் அறிவோம் அல்லவா! நாமும் ஏன் அந்த எல்லாம் வல்ல இறையருளை வேண்டிப் பெறக் கூடாது கண்டிப்பாய் முடியும். அவர்களைப் போல் ஒரு சிறிது அளவேனும் கடவுளிடம் முழு நம்பிக்கை வைத்து அவர்கள் அருளிய பாடல்களையே அந்தந்த பலனுக்காக வேண்டி விடாமுயற்சியுடனும் பக்தியுடனும் பாராயணம் செய்தால், நிச்சயம் இறைவர் அருள்பாலிப்பார்.

ஒரு ஆச்சரியமான சம்பவம் கேளுங்கள். எனது மகன் விமானப் படையில் பணிபுரிந்து வருகிறான். ஒரு நாள் ஸ்கூட்டரில் தாம்பரத்திலிருந்து வரும்போது மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே ஒரு லாரி அதிவேகமாக இவன் ஸ்கூட்டரை மோதிஇவன், தூக்கி எறியப்பட்டு இரத்த காயங்களுடன் ரோட்டில் விழுந்து கிடக்க அருகில் உள்ளவர்கள் பரங்கிமலை மிலிடெரி ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்த்துவிட்டார்கள். பிறகு எங்களுக்கு தெரிவித்தார்கள். நாங்கள் உடனேபோய் பார்த்தால், நிலைமை மிக மோசம். பல இடங்களில் எலும்பு முறிவுகள் மற்றும் உள்ளூற இரத்த காயங்கள், வாய் பக்கம் கோணிப் போய், பார்க்க பரிதாபமாக இருந்தது. பதைத்தோம். மருத்துவர்களைக் கேட்டதில் ரொம்ப பலத்த காயங்கள், எலும்புகள் பல இடங்களில் முறிவுகள், ஆகவே குறைந்தது 5 அல்லது 6 மாதங்கள் ஆகும் என்றார்கள். கடவுளை வேண்டி அழுது வீட்டுக்கு வந்தோம். ''பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்'' ஒரு பிரதியை திரு இராமமூர்த்தியின் மகள் திருமதி கௌரி இராஜகோபால் என்னிடம் கொடுத்து முழுநம்பிக்கையுடன் ''விங்குவிளை கழனிமிகு'' என்ற திருமாகறல் தேவாரம் (சம்பந்தர் பாடியது) அதைவிடாமல் பாராயணம் செய்யச் சொன்னார். அதே பிரகாரம் தினந்தோறும் இரண்டு வேளையும் பூஜை அறையில் உட்கார்ந்து தீவிரமாய் பாராயணம் செய்தோம். சுந்தரருக்கு திருவெண்பாக்கத்தில் ஈசன் ஊன்றுகோல் கொடுத்த மாதிரி சந்தோஷப்பட்டு, நம்பிக்கையுடன் பாராயணம் செய்து வந்தோம். 7-வது நாள் மருத்துவர்கள் ''கட்டு போட்டதெல்லாம் சரியாக அமைந்திருக்கு'' 15 அல்லது 20 நாட்களுக்கு பிறகு பார்க்கலாம் என்றார்கள். என்னே அற்புதம்! ஒரு வாரத்திற்குள் வீட்டிற்கு டிஸ்சார்ஜ்செய்து அனுப்பினார்கள். தொடர்ந்து மொத்தம் 21 நாட்கள் பாராயணம் செய்ததில் எல்லாம் முற்றிலும் குணமாகி அலுவலகத்திற்கு செல்ல ஆரம்பித்து விட்டான். இதைவிட அதிசயம் ஆச்சரியம் உண்டா? நம்பினோரை கைவிடமாட்டார் ஈஸ்வரன்''. இவ்வாறு தாம் பெற்ற பலனை உளமாற உணர்ந்து எழுதியுள்ளார் திருமதி சி. சகுந்தலா.

காணாமல் போன, களவுபோன பொருள் திருப்பதிகங்களைப் போற்றிப் படிப்பதால் திரும்பக் கிடைக்குமா? தாராளமாய் கிடைக்கும். சந்தேகம் வேண்டாம். இதுபற்றி தியாகராய நகர் தருமைதாசன் எழுதுகிறார்.



''கொடுகு வெஞ்சிலை'' எனத் தொடங்கும் திருமுருகன் பூண்டி தேவாரம். இது சுந்தரர் அருளியது. திரு கிருஷ்ணகுமார் (தருமை தாசன்) என்பவருடைய வயதான தாயாரும் சகோதரியின் மகன்களும் ஆற்காடு என்ற ஊரிலிருந்து குழந்தைகள் பள்ளிக்கூட விடுமுறையை ஒட்டி சென்னைக்குப் பேருந்து மூலம் வந்து சைதாப்பேட்டையில் இறங்கி, ஒரு ஆட்டோ ரிக்ஷா மூலம் அவர்கள் இல்லத்திற்கு, அதாவது தியாகராய நகரில் வியாசராவ் தெருவிற்கு வந்தார்கள். வீடு வந்தவுடன் ஆட்டோவில் இருந்து குழந்தைகள் இறங்கி உள்ளே போய் விட்டார்கள். தாயாரும் ஆட்டோ டிரைவருக்கு உரிய தொகையைத் தந்து விட்டு சில சாமான்களுடன் வீட்டுக்குள் வந்து விட்டார்கள். ஆட்டோவும் சென்று விட்டது. சிறிது நேரத்திற்கு பிறகு தான் ஆட்டோவிலேயே ஒரு முக்கியமான கைப்பையையும், டிபன் காரியரையும், மற்றும் ஓரிரண்டு சிறிய சாமான்களையும் விட்டுவிட்டார்கள் என்று தெரியவந்தது. ஒரே குழப்பம். அமளி, ஒருவர் மேல் ஒருவர் குறை கூற இருந்த சமயம் அப்போது எனது தாயாருக்கு ''கொடுகு வெஞ்சிலை'' பாடல் நினைவு வர எல்லோருமாக அந்த சுந்தரர் தேவாரத்தை 2,3 தடவைகள் முழு நம்பிக்கையுடன் பாராயணம் செய்தார்கள். அதிசயம், ஆச்சரியம்! ஒரு மணி நேரத்திற்குள் வாயிலில் ஆட்டோ டிரைவர் வந்து கதவை தட்டி, ''பெரியம்மா சாமான்களை மறந்து வைத்து விட்டார்கள்'' என்று சொல்லி கொண்டுவந்து அப்படியே கொடுத்து விட்டான். அவனுக்கு தக்க சன்மானம் கொடுத்தனுப்பினோம். கைப்பையில் ரூபாய் 2,000-க்கு மேல் இருந்தது. கடவுள் அருள் இல்லாவிட்டால் கிடைத்திருக்குமா? எல்லாம் ஈசன் செயல்'' தருமைதாசன் அவர்கள் தெரிவித்திருக்கும் செய்தி இது. ஆகவே திருமுறைகளைப் பக்திச் சிரத்தையுடன் படியுங்கள்' பாராயணம் செய்யுங்கள். விடாமுயற்சியுடன் படியுங்கள். நிச்சயம் பலன் கிடைக்கும்.

திருமுறையை நம்பிப் படியுங்கள்.
பூரண பலனடையுங்கள்.

''வாழ்க நால்வர் பெருமக்கள்,
வாழ்க திருமுறைகள். வளர்க சைவம்.''

## கடவுள்!

கடவுள் உண்டா? உண்டு என்றால் கண்ணுக்குத் தெரியவில்லையே! எனவே கடவுள் என்பது பொய்யே! என்கிறார்கள் நம்பிக்கையற்றவர்கள்.

கடவுள் உண்டு, உண்டு என்று ஆன்றோர்கள் கூறுவதை, இல்லை என்பவனை பேய் என்று ஒதுக்கி விட வேண்டும் என்று வான்புகழ் வள்ளுவரே கூறுகிறார்.

''உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்''

—குறள் (850)

கடவுள் என்பவர் நமது உள்ளத்தைக் கடந்து நிற்பவர் ஆவார். நம்மைப் பிறவிக் கடலிலிருந்து கடக்கச் செய்பவர் கடவுள்.

கடவுள் என்பதற்குக் கடவுகிறவன் என்ற பொருளும் உண்டு. கடவுதல்-செலுத்துதல். உடம்பை உயிர் செலுத்துகிறது. உயிரைக் கடவுள் செலுத்துகிறார். இறைவன் உயிருக்கு உயிராய் உள்நின்று நம்மைச் செலுத்துகிறான். உடம்புக்குள்ளே உயிர். உயிருக்குள்ளே கடவுள்.

டயருக்குள் டியூப். டியூப்புக்குள்ளே காற்று. டயர்போல் உடம்பும், டியூப்போல் உயிரும், காற்றுப்போல் கடவுளும் என்று உணர வேண்டும்.

''நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே!'' என்று இறைவனை வழிபடுகிறார் மாணிக்க வாசகர்.

—கவிஞர் காசி, எம்.ஏ.எம்.எட்.,

# பரஞான தீப விளக்கம்



" அருணாசல அடிமை "

''திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப்பிள்ளையைப் பேணுவாம்''

உயிர்க் கூட்டத்துள் மேம்பட்டு விளங்குபவர் மக்கள், எப்படி? இயல்பாக எல்லாவகையானஉயிர்களும் அறிவைப்பெற்றிருக்கின்றன. உயிர் இனங்களுள் மக்கள் ஆறறிவைப்பெற்று, ஐம்பொறிகளின் வாயில்களைக் கொண்டு, கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலன்களையும்பெற்றிருக்கின்றார்கள். உயிர் இனங்களில் அறிவு காரணமாக அவைகள் பெற்றிருக்கும் உடம்பினைப் பொறுத்து ஆறு வகைகளாகப் பிரிக்கப் பெற்றிருக்கின்றது. இதனைத் தொல்காப்பியம்

''ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதன் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே''.

என்று தொல்காப்பிய மரபியல் நூற்பா விரிந்துரைக்கிறது. ஆறு வழிகளில் செயற்படும் அறிவுநிலையைக் கொண்ட உயிர் உயர்ந்த உயிராக விளக்கமுறுகிறது. எனவே உயிர் வகைகளுள் மக்கள் மட்டுமே ஆறு அறிவையும் பெற்று மதம், புலன், பொறி சரண இயல்புகளையும் பிற உள்நிலைக் கருவிகளின் தன்மைகளையும்-தம்நிலை, இறைநிலைகளையும் பற்றியஆராய்ச்சியுடன் பசு கரணங்களைப் பதி கரண்ங்களாக ஆக்கும் மேலாம் பகுத்தறிவாய் ஞான நிலையில் நிற்கும் மேன்மையுடன் திகழும் வாய்ப்பு பெறுகிறார்கள். பகுத்தறிவுள்ள நம்உயிர், உடையானை அறிய இயலாமற் செய்வது மாயை. அது வலிமிக்கது. விலக்கினாலும் சிறிது நேரங்கழித்து மீளவும் தண்ணீரை மறைத்துக் கொள்ளும் பாசிபோல் உயிரறிவை இறை நினைவினின்றும் விலக்கி விளையாடுகிறது. அவ் விளையாட்டினுட் புகுத்தியே மக்களை மக்களாய் வாழ்விக்கும் விளையாட்டினைப் பரமன் புரிகிறான். அவன் இவ் விளையாட்டினை நம்மீது செலுத்தி உயிரின் மாசுகளைகிறான். கீழ்க்காணும் திருப்பாடலும் கவனத்துக்குரியதாகும்.

''அகளம் ஆய்உலகம் எல்லாம் ஒடுக்கி அந்
நெறியே யார்க்கும்
நிகளம் ஆய்விருத்திதோன்ற நினைவற
நினைந்து நிற்கும்
துகள் இலாஅறிவு அந்தச் சுந்தரச் சோதி மேல்
நாள்
சகளம் ஆம் உருவங்கொண்டுதான் ஒரு விளை
யாட்டாலே''
—திருவிளையாடற்புராணம்

மக்களுக்கு உரிய பகுத்தறிவு இவ்வுணர்வே, இவ்வுணர்வற்றோரே, ''அரம் போலுங் கூர்மையரேனும் மரம்போல்வர், மக்கட் பண்பு இல்லாதவர்,'' என பிறரால் இழிந்து ஒதுக்கப்பட்டவர். இவ்வுணர்வு உடையோர் இறைவனிடம் பக்தியைக் கைவிடார். பக்தி மட்டும் இருந்துவிட்டால் போதாது, வைராக்கியமும் வேண்டும். வைராக்கியம் என்பது உலகப் பற்றுகளினின்று அறவே நீங்கியிருத்தல், தொடக்கநிலையில் மன ஒருமைப்பாடு கைக்கொள்வோர் பொறியின்பங்களை அறவே நீக்கியிருத்தல் இயலாது.

''ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளா
னைச்
சேயானை சேவகனைத் தென்னன் பெருந்
துறையின்
மேயானை வேதியனை மாது இருக்கும் பாதி
யனை
நாய் ஆன நம்தம்மை ஆட்கொண்ட நாயக
னைத்
தாயான தத்துவனைத் தானே உலகு ஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும் காண் அம்
மானாய்''
-மணிவாசகப்பெருமான்

அதாவது, உள்ளத்தினுள் யாண்டும் மெய்ப்பொருளாயிருக்கும் அவனை ஆழ்ந்து சிந்திக்குமளவு அவன் சொரூபம் விளங்கும். அப்படி உபாசிக்காதவர்களுக்கு அவன் தூரத்தில் இருப்பவன் போன்று தென்படுகிறான். உள்ளும் புறமும் இனிது இருந்து அவன் உயிர்களைப் பக்குவப்படுத்திக்கொண்டே இருக்கிறான். எங்கும் வியாபகமாயுள்ள அறிவுப் பொருள் அவன். யாண்டும் சிவ சக்தியாயிருந்து அவன் ஐம்பொறிகளுக்கும் புலனாகிறான். நமது பக்குவத்திற்கு ஏற்ப அவன் நமக்கு தலைவனாயிருப்பது விளங்குகிறது. அவைகளுக்கெல்லாம்

மேலாக அவன் யாண்டும் தாயாயிருந்து பரிவுடன் நம்மை பேணிவருகிறான். மேலும் கீழ்க் காணும் சமஸ்கிருத சுலோகத்தையும் கவனிப்போமாக.

''ஓம் பூ! புவ: ஸ்வ;
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி!
தியோ யோந: ப்ரசோதயாத்''

*(ரிக் வேத ஸம்ஹிதை : 3.62.10.)*

அதாவது யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க்கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக. இது சூரிய காயத்திரீ யென்றும் பிரம்ம காயத்திரீ யென்றும் பகரப் படுகிறது. ஒவ்வோரு மூர்த்திக்கும் ஒருதனி காயத்திரீ மந்திரமிருக்கிறது. எனினும் இது எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவாயுள்ள காயத்திரி மந்திரமாகும். பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெரும்பான்மையோர் ஜெபித்து வந்துள்ள மந்திரம் இதுவாகும். பண்ணியுள்ள பிரார்த்தனையும் இதுவேயாகும். ஆதலால் இதை தேசியப் பிரார்த்தனை எனலாம். பொருள் உணர்ந்து இதைப் பகர்வோரிடம் பேரறிவு வளர்கிறது.

ஆத்மபோதம் அல்லது அருள் உணர்வை ஊட்டுதலில் இந்தக் காயத்திரியும், இதன் முன் மணிவாசகப் பெருமானது திருப்பாடலும் ஒன்றை ஒன்று ஒத்திருக்கின்றன. இவ்விரண்டு பாடல்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து பிறகு தியானத்திற்கும், பிரார்த்தனைகளுக்கும் இரண்டையும் பயன்படுத்துவது நல்ல ஆத்ம சாதனமாகும்.

மனம் ஒன்றுவிட்டு ஒன்று பற்றும் தன்மையுடையது. மனக்குரங்கு, மனமாம் குதிரை என்றெல்லாம் ஆன்றோரால் அதன் தன்மை விளக்கப்பட்டுள்ளது. ''கண் இல் ஆணவ வெம் கரி'' என்றவாறு ஆணவ மலமானது இரக்கமின்மையை மிகுவிப்பதோடு கட்டுப்பாடு இல்லாமற் காட்டிலே திரியும் யானையைப்போலத் தன்போக்கில் மக்களை நடத்திச்செல்லுகிறது.

''அலையும் மனத்தை அகத்தடக்கும் அவனே
சரியை கடந்தோனாம்
அலையும் மனத்தை அகத்தடக்கும் அவனே
கிரியை முடித்தோனாம்
அலையும் மனத்தை அகத்தடக்கும் அவனே
யோகதற்பரனாம்
அலையும் மனத்தை அகத்தடக்கும் அவனே
ஞானிஅதிசூரன்''.

என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் (திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் முதற்குருநாதர்) நிஷ்டானுபூதியிற் கூறுவதுபோல் மன ஒருமைப்பாட்டினை இயல்விப்பதே பிராணாயாமம் முதலாகக் கூறப்படும் யோகம். யோகம் செய்பவன் யோகி. முற்காலத்திலெல்லாம் காட்டிலேயிருந்து யோகம் பயில்வதே முறையாயிருந்தது. அந்தக் காலத்தில் இருந்த காடுகளைப் போல் இந்த நாளிற் காடும் இல்லை. அங்கு சென்று யோக நெறியைக் கடைப்பிடிப்போரும் அரியவராயினர்.



**தீபத்தைத் தூண்டிய எலி மகாபலி மன்னனாய் பிறந்தவரலாறு தீபவழிபாட்டின் பெருமை உணர்த்தும்.**

எனவே வீட்டில் குடும்பத்தில் உழன்று கொண்டே மூலாதாரக்கனலை (குண்டலினி சக்தி) மேலெழச் செய்து முறையே மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞைகளில் ஏறவும், படிப்படியே திருவருள் நிலை துணை செய்யத் தன் உயிருடன் இறைவனை இணைத்துக் கொள்ளும் நெறி மக்களுக்கின்றியமைதாகிறது. அருணகிரிநாதர் இது பற்றியே

''காவி உடுத்தும் தாழ்சடை வைத்தும்
காடுகள் புக்கும் தடுமாறிக்
காய்கனி துய்த்தும் காயம் ஒறுத்தும்
காசினிமுற்றும் தரியாதே
சீவன் ஒடுக்கம்பூத ஒடுக்கம்
தேர உதிக்கும் பரஞான
தீப விளக்கம் காண எனக்குள்
சீதள பத்மம் தருவாயே
பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட உக்ரம் தருவீரா
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சும் கதிர்வேலா
தூவிகள் நிற்கும் சாலிவிளைக்கும்
சோலை சிறக்கும் புலியூரா
சூரர்மிகக் கொண்டாட நடிக்கும்
தோகை நடத்தும் பெருமாளே''

-திருப்புகழ்.

என்று வேண்டுகிறார்.

கடினமான பயிற்சியை எளிதாக்க இறைவன் ஒருவனால்தான் இயலுமாதலால் இங்கனம் அருள்செய்து நம்மை உயர்வுடன் வேண்டவழி செய்தருளினான். மிக மிகப் பழங்கால முதலாகவே ஒவ்வொருவரும் இம் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதைத்தான் தீபசோதி அறிவுறுத்துகிறது.

''சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத்திருப்பெருந்துறையில்
நிறைமலர்க்குருந்தம் மேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.''

—மாணிக்கவாசகப் பெருமான்.

உள்ளன்போடு இறைவனைக் கூவியழைப்பது அவருடைய அருளைப் பெறுவதற்கு உற்ற உபாயம்.

தீப்பிழம்பாய்நின்று அரி அயனுக்கும் எட்டாத பரம்பொருள், அவ்விருவருக்கும் அருள் வாக்கு அருளியது திருவண்ணாமலை. அப்பரம் பொருள் முயற்சியுடையோர்க்கு எளியவந்து அவர் தம் திருவுள்ளத்தையே கோயிலாக்கிக் கொண்டு உறைவான் என்பதை அனல் உருவத்தில் விளங்கும் தலமாய் அமைந்து, கார்த்திகை மாதக் கார்த்திகையைப் பத்தாம் நாளாய் அமைத்து கொடியேற்றித் தீப விழா நடைபெறும் தலம் அது ஒன்றே.

கொடியேற்று விழா நிகழ்த்துவதன் தத்துவமும் அதுவே. நம் முதுகுத்தண்டின் உட்புற நரம்பு வாயு, நீர், தீ இவைகளைத் துணையாகக்கொண்டு காணக்கூடாத சிறு அளவினதாய்க் கலந்திருக்கும் வெளியிடத்தை இடமாகக் கொண்டு மூலக்கனலை மேலே எழுப்பும் தன்மையுடையது.

இப்படியாக முன்னேற முயற்சியற்றவர்கள் இதன் தன்மைகளை நுனித்தறியாமல் பிறவிகளைப் பெருக்கிக்கொண்டு உழல்கிறார்கள். பழவினை வயத்தால் முன்னேறி உயிர்க்கு உறுதி தேடும் முயற்சியில் ஈடுபடுகின்றவர்கள் ஞானிகள்.

ஞானம் என்பது மேலான அறிவு. அவ்வறிவு இறைவனாம் தன்மையையளிக்கிறது. இதனையே திருவள்ளுவநாயனாரும்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'' என அருளி, அவர்களை நடமாடும் தெய்வம் என உணர வைக்கின்றார்.

உலகத்திலேயே கல்தோன்றி மண்தோன்றி உயிர்தோன்றற்குரிய பக்குவநிலை தந்த முதல் பூமி, நம் நாடாகவேயிருக்கவேண்டுமென்பதற்கு இன்று காணப்பெறும் ஆதாரங்களாவன:

1. திருவண்ணாமலை அக்கினிப் பாறைகளால் இயன்றிருப்பது. இங்ஙனமான பாறைகளுடன் வேறெங்கும்(மலை) கிடையாது.
2. திருவக்கரையிலுள்ள கல்லாகிக் கிடக்கும் மரங்கள் சில. இந்தயிடம் புதுவைக்கும் (பாண்டிச்சேரி) திருமுருகன் குடிகொண்டிருக்கும் மயிலத்திற்கும் இடையில் உள்ளது.

உலகிலேயே இப்படி எங்குமில்லை. பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இவை மிகப் பருத்த உயர்ந்த மரங்களாய் இருந்திருக்க வேண்டுமென அயல்நாட்டு அறிஞர் வியந்து எழுதிவைத்திருக்கின்றனர். (பார்க்க வேண்டியயிடம்)

3. திருமுதுகுன்றம் (விருத்தஅசலம்-விருத்தாசலம்)

## தீப தரிசனம் !

**திருவண்ணாமலை தீபம் கண்டார்க்கு "இருபத்தியொரு தலைமுறைக்கும் முத்தி கிட்டும் என்பது இறைவர் அருள்வாக்கு.**

தீபம் காண்க ! பாபம் தீர்க !!

இங்கு ஆழத்துப் பிள்ளையார் உள்ள இடத்தில் தரைமட்டம் இருந்திருக்கவேண்டும். திருமுதுகுன்றவிநாயகரே மூலாதார விநாயகர். அவருடைய துதிப்பாடல்தான் முகப்பில் உள்ள பாடல்.

திருவண்ணாமலையில் தீப தரிசனத்திற்கு மலை இடமாகிறது. தமிழ்நாட்டில் இங்ஙனம் மலைமீது பெரும் சிறப்புடன் பெருஞ்சோதி தரிசனத்திற்கு வாய்ப்பளிக்கும் வேறு தலம் இல்லை.

பரணி தீபம் மூலாதாரத்தில் ஏற்படுவதாகவும் அன்று முழுவதுமேனும் உண்ணாமலும் உறங்காமலும் வேறு சிந்தனையின்றி இறை நினைவு மட்டுமே கொண்டிருந்து மாலைசோதி தரிசனம் காணவேண்டும் என்பதாகவும், கண்டபின் அதாவது இறைவனைப் புருவ நடுவிலே கண்டபின் இப்பிறவியின் பயன் அடைந்த உறுதியுடன், கூடியவரை பிறநாட்டமின்றி, எண்ணியபோதெல்லாம் உடம்பிலே சோதி தரிசனத்தைக் கண்டு இவ்வுயிரை இறைவனோடு இணைத்து அவனோடு இரண்டறக்கலந்து சாயுச்சிய முத்திக்கு வழிகாணுவதே பிறவிப் பயன் என்பதாகவும் வழிகாட்டுவதே பரஞான தீப விளக்கமாகும்.

''தீப மங்கல சோதி நமோநம''

''சோதியாய்த் தோன்றும் உருவமே அருஆம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே
தீது இலா நன்மைத் திருவருள் குன்றே
திருப்பெருந்துறை உறைசிவனே
யாதுநீபோவது ஓர்வகை எனக்கு அருளாய்
வந்து நின்இணை அடிதந்தே''

—மணிவாசகப்பெருமான்.

இஃது திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளின் திருவருளுக்குப் பாத்திரராகிய சிவத்திரு வெ.ந.அன்பு அருணாசல அடிமை அவர்களால் அநுபவ முறை கொண்டு எழுதப் பெற்றது.

''செம்பொன்னம்பலம்''

''திருவம்பலம்''

''திருச்சிற்றம்பலம்''



# விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்

செந்தமிழ்ச் சைவமணி கோ. சண்முகம், பி.காம்.,

ஓங்கார வடிவினராகிய விநாயகரே முழு முதற் பரம்பொருளாக வணங்கப்படுகிறார். விநாயகர் என்கிற திருப்பெயரின் முதல் எழுத்தாகிய 'வி' தலைமை, சிறப்பு உயர்வு ஆகியவற்றை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

முன்னைப் பழமைக்கும் பழமையாக, பின்னைப் புதுமைக்கும் புதியதாக காட்சியளிக்கும் இறைவனிடமிருந்து முதன் முதலாக தோன்றியது ஓம் என்னும் ஓங்கார மந்திரமாகும். விநாயகருடைய திருவுருவமே ஓம் என்னும் ஓங்கார மந்திரமாகும். விநாயகருடைய திருவுருவமே ஓம் என்னும் பிரணவத்தின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. இதனாலேயே இறைவனின் மூத்த புதல்வராகப் பிள்ளையார் என்னும் அன்புப் பெயரில் அனைவரும் விநாயகரை வணங்கி மகிழ்கின்றனர்.

அகார உகாரங்களாகிய சிவமும் சக்தியும் இணைந்துதான் சுத்தமாயா காரியமாகிய நாதப் பிரணவமாக விநாயகர் வெளிப்படுகிறார். இதையே சிவனும் பார்வதியும் கூடிப் பிள்ளையாரைப் பெற்றார்கள் என்று உலகியலில் கூறப்படுகிறது.

விநாயகரை வழிபட்டு உய்வடைந்த பெரியோர்களில் ஔவைப் பிராட்டியாரும் ஒருவர். மிகச் சிறந்த நீதி நூல்களை இச்சமுதாயத்திற்காக வழங்கிய தமிழ் மூதாட்டியே விநாயகர் அகவலையும் அருளிச் செய்தார். 72 அடிகளைக் கொண்ட சிறிய துதி நூலாக இருந்தாலும் பொருளால் மிகப் பெரியது. யோக அனுபவத்தினையும் ஞானத்தின் சிறப்பினையும் சைவ சித்தாந்தச் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது விநாயகர் அகவலாகும்.

வேலூர் சேண்பாக்கம் சித்தி புத்தி சமேத செல்வ விநாயகர் திருவடியை வணங்கி ஔவை பிராட்டியாரின் அகவலுக்கு உரை எழுத முற்படுகிறேன்.


(நூல்)

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரைஞாணும், பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்
வேழமுகமும், விளங்குசிந் தூரமும்
அஞ்சுகரமும், அங்குச பாசமும்,
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்,
நான்ற வாயும், நாலிரு புயமும்
மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்
இரண்டு செவியும், இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளம்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் (கு) அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து



தலமொரு நான்கும் தந்தெனக் கருளி;
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுக நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி,
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்(கு) அருளி,
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தி
என்செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அருள்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக, விரைகழல் சரணே.

(உரை)

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசைபாடப் (1—2)

குளிர்ந்த கலவைச் சாந்தின் மணம் வீசுகின்ற சிவந்த கமலம் போன்ற திருவடிகளில் அணிந்துள்ள சிலம்பு பல வகையான இசைப் பாட்டு ஒலிகளை உண்டாக்க.

முதன் முதலில் திருவடிப் பெருமையை உணர்த்துகின்றார் ஔவைப் பிராட்டியார். அனைத்து அருளாளர்களும் திருவடிப் பெருமையை உணர்த்துவர். ஏன் எனில் பெருமைகளிலேயே மிக உயர்ந்த பெருமை திருவடிப் பெருமையே. தலையிலுள்ள அயன் எழுத்தையே கந்த வேளின் திருவடிகள் அழித்து விடும் என்பது கந்தர் அலங்காரம்.

''சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில்
தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம்;
மாமயிலோன்

வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரும்
வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை மேலயன்
கையெழுத்தே''

ஞானமே இறைவனுடைய திருவடியாகும். எனவே, 'விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்' என்று உணர்த்துகின்றார் அருணகிரி நாதப் பெருமான்.

''அரிய பதத்தினின் அருவி இருப்பிடம்
அமையுமெனக்கிட முனது பதசரண்''-
திருப்புகழ்
கண்களிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பனவாகாதே ' என்றார் மணிவாசகர்.

இதையே திருமூலரும்

''திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானம் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே''

சீகாழிச் சிற்றம்பல நாடிகள் துகளறு போகத்தில் சொல்லரிய பேரின்பத்தை அடைய வேண்டு மென்றால் விநாயகப் பெருமானின் திருவடிகளையே தொழுவோம் என்று கூறு கிறார்.

''எல்லாம்பொய் என்றேஎனைக் காட்டி
எம்பிரான்
சொல்லாத பேரறிவு தான் சொல்லி
நல்லதொரு
அற்புதமாம் ஆனந்தம் ஆங்கருத்தில்
செப்புதற்குக்
கற்பகத்தின் தாளிணையென் கண்''

ஆக விநாயகப் பெருமானின் திருவடிச் சிறப் பைத் தெரிவிக்கிறார். ஔவைப் பிராட்டியார் 1-2 அடிகளில்.

''பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நால்இரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்.
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்(3-12)

பொன்னால் இயன்ற அரைஞாண் என்கிற அணிகலமும் மென்மையான வெண்பட்டு ஆடையும், அழகிய திருஇடையில் மென்மேலும் அழகுடன் மிளிர்ந்து ஒளி பரப்ப, பெரிய திருவயிறும், மிகுந்த கனமான ஒற்றைத் தந்த மும், யானை முகமும், அதில் ஒளி விடுகின்ற செந்நிறப் பொட்டும், ஐந்து திருக்கைகளும் ஒரு கரத்தில் அங்குசமும் (தோட்டியும்) மற்றொரு கரத்தில் பாசமும் (கயிறும்) அடி யார்கள் உள்ளத்தில் குடியிருக்கும் நீலநிறத் திருமேனியும், தொங்கும் திருவாயும், நான்ற பெரிய திருத்தோள்களும், மூன்று திருக்கண் களும், மும்மதம் பொழிவதால் உண்டான தழும்புகளும் இரண்டு திருச்செவிகளும், . .

## தீங்கில்லையே



**ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை**
**அண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவிஅடங்கக்**
**காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும்**
**கரும்பும் அங்கை**
**சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு**
**தீங்கில்லையே**

விளங்குகின்றபொன்னால்ஆனமகுடமும்,மூன்று புரிகளைச் சேர்த்து முறுக்கேற்றிய பூணூல் ஒளி யுடன் விளங்கும் திருமார்பும் என்றும் விநாயகப் பெருமானின் திருவுருவத்தின் ஒரு பகுதியைப் படம்பிடித்துக் காட்டி அடியார்கள் உள்ளத்தில் என்றும் உறைபவர் விநாயகர் என்கிறார் ஔவைப்பிராட்டியார் 3-12 அடிகளில்.

அடியார்களின் உள்ளத்தில் எப்போதும் குடியிருப்பவன் இறைவன். அப்படி இறைவன் குடியிருக்கும் உள்ளங்களைக் கொண்ட அடி யார் திருக்கூட்டத்தைச் சிறியேன் அறிய வில்லையே என்கிறார் அருணகிரிநாதப் பெரு மான் திருப்பரங்குன்றத் திருப்புகழில்.

உனைத்தினந் தொழுதிலன் உன தியல்பினை
உரைத்திலன்பல மலர்கொடு னடியினை
உறப்பணிந்திலன் ஒருதவ மிலன்உன
தருள்மாறா
உளத்து ளன்பின் உறைவிட மறிகிலன்''

(தொடரும்)

# திருக்குடநீராட்டு விழா காணவிருக்கும் திருக்கழுக்குன்றம்

புலவர் வேதாசலம் (2)

## நந்திதேவர் தவம்புரிதல்

பரமசிவனார் உரைத்தருளிய வேதகிரித் தலத்தை நாடி நந்திதேவன் கங்கையைக் கடந்து விசுவநாதரையும் காளத்தி முதலிய தலங்களையும் தரிசித்து, கச்சி ஏகம்பரைப் பணிந்து வேதகிரி நாடி வந்தனர். வழியில் பாலி நதியில் நீராடி வேதகிரியின் தோற்றத்தைக் கண்ட போதே பாவம் நீங்கியது எனக் கூத்தாடி மலையை அடைந்து அதனைப் பலமுறை வலம் வந்து அம்மலைக்குத் தென்மேற்கில் இருந்த ஒரு தடாகத்தைக் கண்டு மகிழ்ந்து அத்தடாக நீரில் மாலயன் உருவும் சிவலிங்கப்பெருமான் உருவும் தோய்வதைக் கண்டானந்தித்து அக்கரையில் ஐம்பொறிகளையும் அடக்கி, சுழுமுனை நாட்டத்தில் ஆழ்ந்து தவமியற்றினார்.

## திலோத்தமை சாபமடைதல்

நந்திதேவரின் தவநிலையைச் சோதிக்க சிவபெருமான் இந்திரனை அழைத்து நந்தியின் தவத்தினை ''உன்உலக மாதரை ஏவி அழிப்பாயாக'' எனக் கட்டளையிட்டருளினார்.

இந்திரன் செய்வதறியாது ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமையாகிய தேவமாதர்களை அழைத்து சிவபெருமான் கட்டளையைக் கூறி ''உங்களில் யார் போகின்றீர்கள்' என்று வினவினான். தேவமங்கையர் அஞ்சி சோர்ந்து நின்றனர். ஊழ்வினை உறுத்தலால் திலோத்தமை தான் செல்வதாகக் கூறி விடைபெற்றுத் தன் தோழியருடன் வேதகிரிச் சாரலை அடைந்து நந்திதேவர் தவம் இருக்கும் இடத்தைச் சேர்ந்தாள். நந்திதேவரின் தோற்றத்தில் மயங்கி பசுவுருக்கொண்டு அவர் மேனியின் மீது தன் மேனியைச் சேர்த்தாள். நந்திதேவர் கண்விழித்துப் பார்த்து, 'அடாத செயலைச் செய்த நீ எடுத்த பசுவடிவுடன் இவ்வேதகிரி வனத்தில் அலைந்து திரிவாயாக' எனச் சாபமிட்டார். திலோத்தமை நடுநடுங்கி 'ஐயனே! இந்திரன் ஏவலால் வந்தேன். மேலோர் ஏவினால் என்போன்ற அடிமைகள் தவிர்க்க முடியுமோ' என இறைஞ்சினாள். நந்திதேவர் மனமிரங்கி, 'நீ இந்த வனத்தில் இருக்கும் காலத்தில் கலியுக ஆரம்பத்தில் மாமல்லை நகரை ஆளும் சூரியகுல மன்னன் ஒருவன் இவ்வனத்தில் வேட்டையாட வருவான். அவன் விலங்கினங்களைக் கொல்ல ஏவும் கணை உன்மீது படும். அப்பொழுது இப்பசுவுரு நீங்கி பழைய வடிவம் வரும் என்றருளினார். திலோத்தமை பசு வடிவுடன் வேதகிரியில் அலைந்து அங்குள்ள புல்லை மேய்ந்து சுனை நீருண்டு திரிந்தாள்.

## நந்திதேவர் இறைவனை அடைதல்

பிறகு நந்திதேவர் மீண்டும் கண்களை மூடிக்கொண்டு முன்போல் நிட்டைகூடி இருந்தார். சிவபெருமான், திருமால், பிரமன், இந்திரன் மற்றும் முனிவர்கள் சூழ நந்திதேவர் முன் எழுந்தருளினார். நந்திதேவர் இறைவன் திருவடிகளில் விழுந்து வணங்கி பலவாறு துதித்தார். வேதகிரீசர் இவ்வண்ணம் காட்சியளித்து அவ்விடைத் தேவர் மேல் ஏறி இறைவியுடன் வேதகிரியில் எழுந்தருளினார்.

## மாயீகன் பன்றியானது

மாயீகன் என்னும் அரக்கன் மாமிசம் தின்னும் கொடியவன். வேதகிரி மலைச்சாரலில் உள்ள விலங்கினங்களைக் கொல்ல அவ் விலங்கினங்களின் உருவெடுத்து அவைகளைக் கொன்று தின்று வந்தான். ஒரு நாள் ஒரு பெரிய பன்றியினைக் கண்டு அதனைக் கொல்ல தானும் ஒரு பன்றி வடிவெடுத்து அதனைத் துரத்தினான். இதனை அம்மலைச் சாரலில் தவம் இயற்றிக் கொண்டிருக்கும் மார்க்கண்ட முனிவர் கண்டார். மாயீகனின் கொடுஞ் செயல்களைக் கூறி 'நீ பன்றியாகவே திரியக் கடவாயாக' எனச் சாபமிட்டார். அவன் அஞ்சி வேண்டினான். 'மார்க்கண்ட முனிவர் 'மல்லையிலிருந்து சுரகுருவென்றொரு மன்னன் பிற்காலத்தில் இங்கு வேட்டைக்கு வருவான். அவன் விடும் கணையால் உன் பழைய வடிவம் பெறுவாய்' என்றருளினார். மாயீகன் பன்றி வடிவுடன் வேதகிரிச் சாரலில் திரிந்து கொண்டிருந்தான்.

## இந்திரன் வழிபட்டது

தேவேந்திரன் கங்கை நதிக்கரையில், தான் வைத்திருந்த பந்தினை இழந்து வருந்திக்கொண்டிருந்த ஒரு தேவமங்கையின் துயரைப்போக்க, அவள் பந்தினைக் கவர்ந்து சென்ற ஆடவன் கயிலை சென்றதாகக் கூறியதால் அவனைத் தேடிக் கயிலையை அடைந்தான். சிவபெருமான் அப்பந்து தம் அருகு இருக்கும்படி ஒரு மாயம் செய்து பார்வதி ஒரு கன்னியாகவும் தான் ஒரு இளைஞன் போலவும் வடிவெடுத்து சூதாடுவோர்போல் ஒரு திருவிளையாடல் இயற்றினார். அவர் அருகு வந்து பந்திருக்கக் கண்ட இந்திரன் அவர் பந்தினைக் கவர்ந்ததாகக் கருதி, அவரைப் பலவாறு இகழ்ந்து பந்தினைக் கேட்டான். பரமசிவனார் இந்திரன் கூறியதைக் கேளாதவர்போல் இருந்தார். இந்திரன் வெகுண்டு அவரை தன் வச்சிரப் படையால் தாக்கக் கருதி வச்சிரப் படையை ஓங்கினான். இறைவர் இந்திரனை கடைக்கண்ணால் நோக்கினார். அவ்வளவில் ஓங்கியகையுடன் தம்பம் போல் அசைவற்று நின்றனன். பிறகு சிவபெருமான் அருகிருந்த தோழி ஒருத்தியை அழைத்து இந்திரனைக் குகையில் அடைத்து விடமுள்ள பாம்புகளால் பிணைக்கும்படி கட்டளையிட்டருளினார். இந்திரன் மிகவும் துன்பமுற்றான். தான் செய்யத் துணிந்த தவறை எண்ணி வருந்திக் கொண்டிருந்தான்.

தேவகுரு தேவர்களுடன் இந்திரனைப் பல இடங்களில்தேடிக் கயிலையை அடைந்தார். அங்கு எதிரில் வந்த நாரதமுனிவரால் இந்திரன்

செயல், இருக்குமிடம் முதலிய அறிந்து மிகவும் அஞ்சி, தேவர்களுடன் சிவபெருமான் திருவடிகளில் விழுந்து இந்திரனை மன்னிக்குமாறு வேண்டினார். சிவபெருமான் இந்திரனை சிறை நீக்கி அழைத்து வரச்செய்தார். இந்திரன் சிவபெருமான் திருவடிகளில் விழுந்து எழுந்திராமல் அழுதான். சிவபெருமான் இப்பாவம் நீங்க வேதகிரியை அடைந்து தவமியற்றுமாறு அருளிச் செய்தார். இந்திரன் வேதகிரியை அடைந்து மலராலும் நன்னீராலும் இறைவனைப் பூசித்து அவரருள் பெற்றுத் தன்பதம் அடைந்தான். அன்று முதல் இப்புரிக்கு இந்திர புரி எனும் பெயருண்டாகியது.

## திருமால் வழிபட்டது

திருமால் உபேந்திர பதவியில் இருக்கும் போது தேவர்கள் அவரிடம் வந்து, அரக்கர்கள் தங்களைத் துன்புறுத்துவதினின்றும் காக்குமாறு வேண்டினர். திருமால் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி அவுணர்களைக் கொல்வதற்குச் சென்றனர். அவுணர்கள் பயந்து ஓடி வனத்தில் புகுந்தனர். வனத்தில் இருந்த பிருகு முனிவரின் ஆசிரமத்தை அடைந்து பிருகு முனிவரின் பத்தினியிடம் தங்களைக் காக்குமாறு வேண்டினர். அவ்வம்மையார் அவர்களை ஆசிரமத்தில் ஒளித்து வைத்து வாயிற்படியில் ஒரு சட்டுவத்துடன் நின்றனர். அரக்கர்களைத் தேடி வந்த திருமால் பிருகு முனிவரின் மனைவியை நோக்கி, 'அரக்கர்கள் உங்கள் ஆசிரமத்தினுள் இருக்கிறார்கள் வழிவிடுங்கள்' என்றார். அவ்வம்மையார், ''அடைக்கலமாக வந்தவர்களை விடுவது அறமன்று'' என்றார்.

திருமால், ''அறிவுள்ள பிருகு பத்தினியே! நீ அரக்கர்களை விடாமல் தடுத்தனை' எனக் கோபித்து அவ்வனம் முழுவதும் தீயில் முழுகும்படி சக்கரத்தை ஏவினார். அந்த சக்கரம் அந்தக் காடும், அரக்கர்களும் பிருகு முனிவரின் பத்தினியும் வேகும்படி கோபத்துடன் சுட்டது. சிவபெருமானால் முப்புரத்தவர்கள் இறந்தது போல் அவ்வரக்கர்களும் முனிவரின் மனைவியும் அழிந்தார்கள்.

அவ்வமயம் பிருகு முனிவர் அங்கு வந்தார். தன்மனைவியும் பெரிய வனமும் அழிந்தது திருமால் ஏவிய சக்கரப்படையால் என்றறிந்து, தன் மனைவியிடத்து வைத்த அன்பினால் மனம் வாடினார். இத்திருமால் திருமகளை விரும்பிய காதலையுடையவன். பின்வருவதையறிகிலன், பெண் கொலையையும் கருதவில்லை. அடைக்கலமாக வந்தவர்களைக் காப்பது அறமாகும்., அச்செயலைச் செய்த என் மனைவியைக் கொன்றது அறமாகுமோ எனத் திருமாலை நோக்கி, ''நீ சக்கரமேந்தியது அனைவரையும் காப்பதற்காகும். தேவர்களுக்கு நன்மையும் மேன்மையும் செய்யும் தவத்தினரைக் கொல்வதற்கன்று. என் மனைவியைக் கொன்று துன்பத்தினை விளைவித்த நீ எடுக்கும் பத்துப் பிறவியில் ஒரு பிறவியில் ஊரையும் விட்டு, அறிவு மயங்கி உயர்வனத்திற்போய் மனைவியைப் பிரிந்து நீயும் தவிக்கக்கடவை'' எனச் சாபமிட்டார்.

திருமால் பிருகு முனிவரை நோக்கி 'உமது மனைவியை இப்போது எழுப்பித் தருகிறேன். என் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்'' என்று அவர் மனைவியைக் கொன்ற சக்கரத்தை எதிரில் வைத்து, தன்கால் பெரிய விரலைப் பூமியில் ஊன்றினர். ஊன்றிய இடத்தில் குளிர்ந்த நீருண்டாகியது. அந்த நீரைப் பிருகு முனிவரின் மனைவியின் எலும்புக்கூடு மீது தெளித்தார். தெளித்தவுடன் அவள் உயிர் பெற்றெழுந்தாள். பிருகு முனிவர் மகிழ்ந்து பலவாறு புகழ்ந்து, ''இந்த நாளில் நானிட்ட சாபப்படி அந்த நாளில் தேவர்களுக்கு உதவியாய் நீ செல்லுங்காலத்தில் உன் மனைவி பிரிவாள். பிறகு நீ அரக்கர்களைக் கொன்று உன் மனைவியை அடைவை. நீ முனி பத்தினியைக் கொன்ற பாவம் நீங்க வேதகிரியை அடைந்து பூசிப்பாயாக'' எனக் கூறினார்.

பிறகு திருமால் வேதகிரியை அடைந்து, திருமஞ்சன நீர் திருப்பள்ளித்தாமம் முதலியவற்றைக் கொண்டு வேதநெறிப்படி பூசனை செய்து வேதகிரீசன் திருவருளைப் பெற்றுத் தம்பதம் சென்றார். திருமால் அதற்குமுன்னும் திரிபுரத்தில் இருந்த அவுணர்கள் செய்யும் சிவபூசை வழுவும்படி செய்த மாயத்தால் விளைந்த பாதகம் தொலையும்படியும், பிறகு கிருட்டிணனாகப் பிறந்தபோது மாமனைக் கொன்ற பாதகமும் தொலைய வேதகிரி வந்து பூசித்துத் தொழுது சென்றார். நாராயணன் வழிபட்டதால் இத்தலத்திற்கு நாராயணபுரி என்றும் பெயருண்டாகியது.

## பிரமன் வழிபட்டது

பிரமன், சாவித்திரி, சரசுவதி எனும் இரு மனைவியரில் சாவித்திரியை நீங்கி சரசுவதியைப் பிரியாமலிருந்தான். சாவித்திரி தன்னை விட்டு நீங்கி வெண்மை நிறமுடைய பாரதியை விட்டு நீங்காதிருத்தலைக் கண்டு வெறுத்து ''வேதங்கள் உபநிடதங்களில் பகுப்புடன் உன்னை விட்டுநீங்கக்கடவது'' என்று சாபமிட்டு ஏழுமுனிவர்கள் இடத்திற்குச் சென்று ஓவியம் போல் அசைவற்றிருந்து தவமியற்றினாள். சாவிரித்திரியிட்ட சாபத்தினால் பிரம்மன் ஒளியும் செயலும் இழந்திருந்தான். அவ்வாறு இருந்த பிரமனை மதுகயிடவர்கள் என்னும் அரக்கர்கள் துன்புறுத்தத் தொடங்கினர். பிரமன் மனத்திலும் நினைக்க முடியாத துயரங் கொண்டு, பாற்கடலினிடத்துச் சென்று, திருமால் துயிலுதற்கேதுவாகிய மாய சக்தியை துதித்துத் தொழுதார். அவள் நீங்கியவுடன் விழித்த திருமாலைத் தொழுது மதுகயிடவர்களால் தான் துன்புறுதலைக் கூறி முறையிட்டார். திருமால் வில்லை எடுத்து மதுகயிடவர்களுடன் பல ஆண்டுகள் போர் செய்து அவர்களைக் கொன்றார். பிறகு பிரமனிடமிருந்து சாவித்திரி பிரிந்தமை முதலியனவுணர்ந்து, பிரமன் செய்த அறியாமையை உணர்த்தி, ''வேதகிரியில் சிவபெருமான் உமையுடனும் இரு மைந்தர்களுடனும் வீற்றிருக்கிறார். அங்குச் சென்று வழிபடுக'' என்று அனுப்பினார். பிரமன் அவ்வாறே வேதகிரியை அடைந்து சிவபெருமானைப் பூசித்துப் பலவாறு புகழ்ந்து துதித்து அப்பெருமான் அருளால் சாவித்திரியின் சாபம் நீங்கி, அச்சாவித்திரியுடன் சத்தியலோகம் சென்றார். அன்று முதல் இப்பதிக்குப் 'பிரமபுரி' எனும் பெயர் உண்டாகியது.

(தொடர்ந்து வரும்)

# குமரகுருபரர் கண்ட

# குஞ்சிதபாதன்

## நடராசன் அடிமை

நெல்லை மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் என்னும் தலத்தில் அவதரித்த சான்றோராகிய குமரகுருபர சுவாமிகள் சிதம்பரம் பற்றி ''சிதம்பர மும்மணிக் கோவை'', சிதம்பரச் செய்யுட் கோவை'' என்று இரண்டு முழு நூல் களையே பாடியுள்ளார். இப்பெரியோரின் பக்திச் சுவைநிறைந்த கற்பனைகள் எப்படிப் பட்டவரையும் கல்மனம் கரையச்செய்து, சிதம்பரநாதனை-நடராசப் பெருமானை நெஞ் சில் கொண்டுவந்து நிறுத்திவிடுவன. சில அழ கிய செய்திகளைக் காண்போம்.

நடராசப் பெருமானது ஆடினத்திருக் கோலம் ஐந்து தொழில்களைச் செய்கின்றது. அவரது கையிலிருக்கும் டமருகம் என்னும் உடுக் கையிலிருந்து உலகம் படைக்கப்பெறுகிறது. அவரது அமைந்த அபயக்கரம் காத்தல் தொழிலைச் செய்கின்றது. அக்கினிக்கரம் அழித்தல் என்னும் தொழிலைச் செய்கிறது. ஊன்றிய திருவடிக்கு அடியில் நமது பாப புண் ணியங்கள் மறைக்கப்பெற்றுள்ளன. தூக்கிய திருவடி அருளல் என்னும் அனுக்கிரகத் தொழி லைச் செய்கிறது.

''தோற்றம் துடியதனில் தோன்றும் திதி
யமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம்; முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.''

என இக்காட்சியை உண்மை விளக்கம் என்ற நூல் கூறுகிறது.

இவ்வைந்து தொழில்களையும் இறை வன் செய்ய அம்மை சிவகாமவல்லி அருகே நிற் கின்றார். இதற்குக் காரணம் உண்டு. திரு நடனக்கோலம் என்பது நம்பிறவிப்பிணிக்கு ஒரு வீரமான மருந்து. அழகின் பிழம்பு. அதிக மான அழகு பூராவும் கண்டால் நம்மால் தாங்க முடியாது. 'அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரேயாற்ற வல்லார்'? என்பது கவிச்சக்கர வர்த்தியின் கேள்வி.

திருநடனம் காணும் அதிகமான இன் பத்தை நாம் தாங்கவே முடியாது. குழந்தை யின் குடல் கடினமான மருந்தைத் தாங்காது என்பதால், தாய் அம்மருந்தை உட்கொண்டு, தனது பாலின் மூலம் குழந்தைக்குக் கிடைக்கு மாறு செய்கிறாள் அன்றோ! அதுபோல அம்மை இறைவனின் நடனத்தைத்தான் தரிசித்து, தனது அருளான பாலில் குழைத்துத்தன் குழந் தைகளான அடியாருக்கு அளிக்கின்றாள். 'பாலுண்குழவி பசுங்குடர் பொறாது என்ன நோயுண்மருந்து தாயுண்டாங்கு' எனப் பேசு கிறது குமரகுருபரரின் திருவாக்கு.

''இறைவனே உன்னையடைய இல்லறம் துறவறம் என இரு வழிகள் உள்ளன என்பர்.

இல்லறம் என்பது நன்கு கல்வியறிவு பெற்று, நற்குணமுள்ள மனைவியை அடைந்து அன்பு, இரக்கம் முதலான நற்குணங்களுடன் விருந்தாளிகளையும் தவஞ்செய்யும் பெரியோர் களையும் பேணி, தெய்வம் பிதுர்க்கள் முதலா னவருக்கு ஆகவேண்டிய கடமைகளைச் செய்து தருமவழியில் வாழ்க்கை நடத்தி மக்கட்பேற டைதல் முதலானவையாகும். துறவு வேடம் பூண்டுள்ள அடியேன் இனி எவ்வாறு இல்லறம் பற்றி நினைக்கமுடியும்?

துறவு என்பது மனையும் பிறவும் துறந்து வாய்மை, தூய்மை முதலானவற்றைக் கைக் கொண்டு, எறும்பு போன்ற சிறு உயிர்களுக்கும் செடி கொடிகளுக்கும் கூடத் துன்பம் செய்யாது தோலுடைதரித்துக் கால்நடையாக, உடலை வாட்டி எலும்பும் தோலுமாகி, காட்டிலும் மலையிலும் புகுந்து சருகு முதலானவை களை உட்கொண்டு உணவைக் குறைத்துப் பின் னர் தண்ணீர் அருந்தி வாழவேண்டும். மழை, குளிர்க் காலங்களில் குளிர்ந்த நீரில் நீராடியும், வெய்யிற் காலத்தில் நான்கு பக்கங்களிலும் தீ மூட்டி நடுவில் நின்று மேலேயிருந்து சூரியனின் வெயில்பட(இதைப் பஞ்சாக்கினி மத்தியில் நிற் பது என்பர்) உடம்பை வருத்தித் தவம் செய் தல் வேண்டும். இதற்கேற்ற உடல் வலியும், மனவலியும் எனக்கு இல்லை என நினைக் கிறேன்.

வேறு வழியுண்டோ எனக் கேட்டேன். திருவாரூரில் பிறக்க முத்தி என்றனர்; ஸ்ரீவை குண்டத்தில் பிறந்த எனக்கு இனிமேல் இது சாத்யமாகுமா! காசியில் இறக்க முத்தி என் றனர்.

காசிக்குச் செல்ல நல்ல வழியில் ஈட்டிய பொருளைக் கொண்டு, பிறரிடம் பொருள் கேளாவிரதம் பூண்டு, காடுவழி நடந்து சென்று பசி தாகங்களைப் பொறுத்து, நோய்களால் பீடிக்கப்படாமல் பனி முதலானவைகளால் பீடிக்கப்படும் போது நடுவிலேயே உயிர் நீங் காது காசி சேர்தல் வேண்டும். அங்கு சென்று நல் ஒழுக்கத்தோடு உடலை விட்டுத் தானாக நீங்கும் வரை வாழவேண்டும். இதுவும் கடுமை யான காரியமாகத் தோன்றியது.

சிதம்பரம் தரிசிக்க முத்தி; உன் திருக் கூத்தை ஒரு கால்நோக்கி (ஒரு தடவை தரி சித்து என ஒரு பொருள். தூக்கிய திருவடியான குஞ்சிதபாதமெனும் ஒரு காலைத் தரிசித்துளன மற்றொரு பொருள்) நற்கதியடைய நின்திரு முன் வந்துள்ளேன். இவன் அன்பில்லா தவன், கொடியவன் என என்னைத் தள்ளி விடாதே.

பெருமானே! நீ பிறவியான நோய்க்கு மருந்து. மருந்தை மகிழ்ச்சியோடு உண்டாலும், கசக்கிறதே எனவெறுத்து முகம்சுளித்து உண் டாலும், உண்டவர் எவரானாலும் மருந்து தன் வேலையைத் தவறாது செய்கின்றதன்றோ!

''மருந்துண்வேட்கையன் மனமகிழ்ந்துண்
அருந்துழி ஒருவன் அருவருப்புறீ இத் [ணினும்
தன்முகம் சுளித்துத் தலைநடுக்குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகுமாயின் அம்மருந்து இருவருக்கும்
தீப்பிணி மாற்றுதல் திண்ணமே.''

அதுபோல, பக்தியுள்ளவன், பக்தியற்றவன் என்ற பேதமின்றி அடியேனைக் காத்தருள்க'' என்கிறார் குமரகுருபர சுவாமிகள்.

சிதம்பரம் மும்மணிக்கோவையின் முதற் பாடலின் கருத்துக்கள் இவை. முழுநூலும் எப் படியிருக்கும் என்பதை மேலும் சில அழகிய கருத்துக்களை நோக்கி இன்புறுவோம்.

சிதம்பரத்திற்கு புண்டரீகபுரம் என ஒரு பெயர் உண்டு. இதை மெய்ப்பிப்பது போல் குமரகுருபரர், ''பொன்னம்பலம் தாமரையில் நடுக்கொட்டையாகவும், மதில்கள் இதழ்களா கவும், சுற்றி வரும் மேகங்கள் தாமரையை நோக்கிவரும் வண்டுகள் போலவும் அமைந் துள்ளது'' என்கின்றார்.

உலகத்தைத் தன் தலையில் தாங்கும் ஆதிசேஷன் எனும் பாம்பு தன் அடியவனான பதஞ்சலியாக வந்துள்ளார். இரண்டு கால்களை யும் ஊன்றி நின்றால் அவர் தாங்கமாட்டார் என ஒரு காலை மட்டும் தரையில் ஊன்றிக் கொண்டு நடன கோலத்தில் நிற்கிறார் இறை வன் என்கிறார் குமரகுருபரர்.

நம் உடலான கூட்டில் உள்ள ஆசையே உருவான ஐம்புலன்களான பாம்புகளை அடக் கும் சக்தியுடைய இறைவன் ஒரு பாம்பான பதஞ்சலி எனும் ஆதிசேடனுக்குக் கட்டுப்பட்டு ஆடுகிறார் என விநோதமாகக் கூறுகிறார்.

---

**உபாயம் பலவுள!**

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே

—திருமந்திரம்

---

இந்திரபதவியும், மன்மதனின் அழகும், குபேரனது செல்வமும் கிடைத்தாலும் பெரி யோர்கள் மகிழமாட்டார்கள். அடியேன் கண் டதே காட்சி கொண்டதே கோலம் என உள்ள வன் எனத் தன்னை வெறுத்துக்கொண்டு இறைவனிடம் அருமையான வரம் கேட்கிறார்.

வேர்ப்பலா பூமிக்குள் பழுக்கின்றது. பூமி யைத் தோண்டித்தான் பழத்தை எடுக்கவேண் டும் என்பார்கள். ஆதிசேடன் பாதாள உலகில் வசிப்பவர். பாதாள உலகம் அவரைப் பூவுல கிற்குப் பதஞ்சலி முனிவராக அனுப்பிச் சிதம் பரத்தலமும் ஆடல் நாயகனான தில்லைக் கூத் தனை உலகத்திற்குக் கிடைக்கும்படி செய்தது. உலகிற்கு நடராசப்பெருமான் கிடைப்பதற்குக் காரணமாயிருந்த பாதாள உலகிற்குத்தனது நன்றியைக் காட்டுவதுபோல் பலாப்பழத்தை மண்ணுக்குள் வைத்து பூவுலகம் அனுப்புகிறது. அதுதான் மண்ணுக்குள் வேர்ப்பலா விளை கிறது என அழகியகற்பனை செய்கிறார்.

''பூவாது பழுக்கும் சூலடிப்பனசம்
பார்கிழிந்தோடி பணியுலகளந்த
வேர்தொறும் வேர்தொறும் வெவ்வேறு
பழுத்தும்
உட்புறக் கனிகள் தூங்குவ: தொட்பமொடு
பதஞ்சலி முனிவனைப் பார்கொளத்தந்த
பிலங்கொளக்கொடுக்கும் பலங்கள் பலநிகர்க்
கும்
மல்லம் பொழில் சூழ்தில்லைவாண!''

எனஅழைத்து ''இறைவனே! பெருங்குளிருக்கு அடியேனுக்கு நிறைய தையல் போட்ட ஒரு கந்தைத் துணியையும், உப்பில்லாத கஞ்சி — அதற்குமேல் எதாவது வேண்டுமென நான் வாய்விட்டு அலறினாலும் எவரும் கொடுக்கக் கூடாது— படுத்துறங்க ஒரு ஓட்டுத் திண்ணை யும் தந்தருள்க. உனது அடியாரின் நட்பையும் அருளவேணும். கடைசியாக ஒரு வரம் வேண் டும். உன் திருவடியைத்தவிர நான் வேறு எந்த வரம் கேட்டாலும் நீர் அளிக்கக்கூடாது'' என வரம் கேட்கின்றார்.

நம் முன்னோர்களின் எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும் எத்தகைய பெருமையுடை டையது. இத்தகைய தியாக புத்தி நமக்கு உண் டாக இறைவன் அருள்வேண்டுவோம்!

காக்கும் தெய்வமான திருமால் படுத்தி ருக்கும்போது எதிரிலே நடராசப் பெருமான்

காலைத் தூக்கிக்கொண்டு நிற்கலாமா எனத் தோன்றலாம். இறைவனுக்கு சங்கரநாராயணன் என ஒரு பெயர் உண்டு. இறைவனான சிவபெருமான் தன் வலப்பாதியைத் திருமாலுக்கும் இடப்பாதியைஅம்மைக்கும் கொடுத்துவிட்டான் என ஒரு பக்தர் கூறினார். காரைக்கால் அம்மையாரும், ''அப்படி யாயின் உன் உருவம்தான் என்ன'' என்று கேட்கிறார்.

''ஒருபால் உலகளந்த மாலவனாம்; மற்றை
ஒருபால் உமையவளாம்-இருபாலும்
நின்னுருவமாக நிறம் தெரியமாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து.''

இறைவனருகில் பவானி என்ற அன்னையாகவும், ஆணுருவில் திருமாலாகவும், கோபங்கொண்ட கோலத்தில் காளி என்றும், போர்க்கோலம் கொண்டபோது துர்க்கை எனவும் கூறுவர். அம்மையின் உருவத்தில் இறைவனது ஒரு பாகம் இருப்பது

''பிரிவிலா அமரர் கூடி எம்பெருமான் என்று
ஏத்தும்
அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே''

என்பது அப்பர் பெருமானின் வாக்கு. மதுரையில் மீனாட்சியம்மையை ஏற்றருள்க என திருமணத்தில் தாரை வார்த்தளித்தது திருமாலே என்பது பரஞ்சோதி முனிவரின் வாக்கு.

திருமாலின் எதிரிலே இடக்காலைத்தான் தூக்கியிருக்கிறார். சிவபெருமான் தனது காலைத் தூக்கிக்காட்டித் திருமாலை அவமதிக்கவில்லை. தனது தங்கையான அம்மையின் காலானபடியால் திருமாலும் அச்செயலைக் குற்றமாகக் கொள்ளவில்லை என்கிறார்.

''தக்கனார் வேள்வி தகர்த்துச் சமர்முடித்த
நக்கனார் தில்லை நடராசர்- ஒக்கற்
படப்பாயாலான் காப்பைந் நொடிதாள்
இடப்பாதம் தூங்கியவாறு.'' (என்றோ

ஐயா! யமதருமராசரே! என்னை நீர் பிடித்துச் சென்றால் யமதருமராசன் என்ற உமது பெயரே அழிந்துவிடும்! தன் அடியார்களைத் தீண்டினால் உம்மை முன் செய்த மாதிரி மீண்டும் எட்டி உதைத்து விடுவேன் என்பதைக் காட்டுவதற்காகவே தென்திசையை நோக்கிக் காலைத் தூக்கிக்கொண்டு நமது நடராசப் பெருமான் நிற்கிறார் என நடராசப்பெருமானின் சந்நிதி தெற்கு நோக்கி அமைந்துள்ளதற்குக் காரணம் கூறுகிறார்.

தன்னையடைந்தவரைத் தன்மயம் (சிவமயம்) ஆக்குவது இறைவனின் வழக்கம். ஆனால் பதஞ்சலிமுனிவர் நடராசப் பெருமானையடைந்து அவரைப் பதஞ்சலியார் ஆக்கிவிட்டார். பதம் சலியாது ஆடி எம்பெருமான் நிற்பதைப் பதஞ்சலி என அழகிய முறையில் காட்டுகிறார் குமரகுருபரர்.

ஆடும் திருக்கோலத்தில் இறைவன் நிற்கும்போது தன் இடது கையைத் தனது தூக்கிய திருவடிக்கு நேராகக் காட்டுகிறார். வலது கை அபயகரமாகப் போதும் என்பது



நடராசர் கால்மாறியாடிய கோலமிது

போல் காட்டிக் கொண்டு உள்ளது. ''இந்த இடது திருவடியை ஒருமுறை நோக்கினால் கும்பிட்டால் போதும் (ஒரு கால் கும்பிட்டால் போதும்) என வலக்கரம் காட்டுகிறது எனச் கூறுகிறார்.

''கூடும்கதி ஒரு கால் கும்பிட்டால்
போதுமென
நாடும் அவிநயத்தை நண்ணிற்றால்-ஓடியகட்
காதனார் காண ஒருகால் காட்டிக்கையமைத்து
நாதனார் செய்யும் நடம்.''

நடராசப் பெருமானைத் தரிசனம் செய்தவருக்கு யமதரிசனம் கிட்டாது. யமன் நடராசப் பெருமானின் அடியார்களின் எதிரில் வரமாட்டான் என்பது குறிப்பு. எனவே இறப்பு என்பது அவருக்குக் கிடையாது என்று காட்டினார்.

பிரமனிடம் ''மனிதனாகப் பிறக்க வரம் வேண்டும்'' எனக் கேட்டால் கூடத் தரமாட்டான். சிவபெருமானின் திருக்கரத்தில் இருப்பது பிரமனின் தலை ஓடு. எத்தனையோ பிரம்மாக்கள் வந்துபோனார். நூறுகோடி பிரமர்கள் நொந்தினார் என்பது அப்பர்வாக்கு. தன் தலையையும் இறைவன் கையில் ஏந்திவிடுவார். தானும் அழிந்துவிடுவோம் என பயந்து அடியாருக்கு பிறப்பையருளமாட்டான் பிரமன் என்கிறார்.

''தீர்த்த மென்பது சிவகங்கையே
ஏத்தரும் தலம் எழிற் புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''

என மூர்த்தி, தீர்த்தம், தலம் என்ற மூவகைச் சிறப்புக்களையும் உடையது சிதம்பரம் என குறித்தார்.

உலகை அழிப்பதற்காக ஆலகால விஷம் பொங்கி வந்தது. தேவர்களும் மற்ற யாவரும் நடுங்கி ஓடிச் சிவபெருமானை அடைக்கலம் புகுந்தனர். சிவபெருமான் நஞ்சை உண்டு கண்டம் கறுத்து நீலகண்டனானார். அப்படிச் செய்திராவிட்டால் தேவரும் மற்ற யாவரும் அழிந்திருப்பர். அவர்கள் மனைவிமார்கள் தங்களது கணவர்களை இழந்து அலறி மார்பில் அடித்துக் கொள்ள அவர்களது மார்புகளும் கைகளும் சிவந்து போயிருக்கும். இறைவன் தன் அடியார்கட்குத் துன்பம் நேராது காத்தனர் என்கிறார்.

''அங்கவன் உறைதரும் ஆழிச் சேக்கையை
புலிக்கால் முனிவரன் புதல்வனுக்கு
நலத்தகு கருணையின் நயந்தளித்தனை; அவன்
அதனால்
பாயலும் அமளியும் இன்றி மன்றநின்
வாயிலில் நெடுநாள் வைகினன்; அணையொடும்
அத்திருமனை அவற்கு அளித்தி: நின்
மெய்த் தொழிலன்றே வீடுநல்குவதே''

நடராசப் பெருமானை வணங்கிய உடம்பிலுள்ள உறுப்புக்கள் யாவற்றையும் வாழ்த்துகிறார்.

''வாழி திருமன்றம்கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வான் செவிகள்
வாழி அவனை வணங்குமுடிச் சென்னி
வாழி அவன் சீர்பாடும் வாய்.''

குமரகுருபர சுவாமிகளின் சிதம்பர மும்மணி கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை மட்டுமல்ல. அவரது பிரபந்தத் திரட்டுப் பூராவும் ஒரு கற்கண்டுமலை. அனுதினமும் அவற்றைப் படித்து அளவிலா இன்பமடைந்து வருகிறேன். இச்சிறு கட்டுரையில் அப்பெருமானது இலக்கியத்தின் தெய்வீகப் பெருமையை எழுத முடியாது. எனவே அன்பர்கள் நேரில் படித்து இன்புற வேண்டுகிறேன்.

## கோடி புண்ணியம் வேண்டுமா?

1. மரணபயத்தை நீக்கிடும். சிவபெருமானைத் துதித்து புண்ணியம் பெறலாம்

2. கையில் வைத்து உருட்டிக் கொண்டே ஜபம் செய்தல் கோடி புண்ணியம் கிடைக்கும்.

3. அனைத்து பாபங்களும் நீங்க உருத்திராட்சக் கொட்டைகளை மாலையாகக் கோர்த்து அணிய வேண்டும்.

4. கொட்டைகளில் மின்சாரம் இருக்கிறது.

5. தாமிரக் கம்பிகளின் இடையே உருத்திராட்சத்தை வைத்து தூக்கும்பொழுது உருத்திராட்சம் சுழலும்.

6. உருத்திராட்ச மாலைகள் உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்தும்.

7. உடலின் வெப்பத்தையும் ரத்தக் கொதிப்பையும் தணிக்கும் ஆற்றல் உடையது.

8. கொட்டையைத்தேன்விட்டுஉரைத்து நாக்கில் தடவ விக்கல், பித்த மயக்கம் மரணத்தைத் தருகின்ற கபம் குணமாகும்.

9. டற்பங்கள், செந்தூரங்களில் உருத்திராட்ச இலை இடம் பெறுகிறது.

10. சிவபெருமானின் கண்ணிலிருந்து உருத்திராட்சம் தோன்றியதாக கூறுவர்.

11. உருத்திராட்ச மரம் நீலகிரி, ஆனைமலை, பழனிமலைக்காடுகளில் காணப்படுகிறது.

12. உருத்திராட்ச மாலை செய்யும்போது வெள்ளி, தங்கத்தகடுகளை வைத்துக் கட்டுவார்கள்.

13. வில்வப் பழக் தோட்டை வைத்து மாலைகள் கட்டுவதுண்டு.

14. உருத்திராட்ச மரம் 25 மீட்டர் உயரமும், 2 மீட்டர் சுற்றளவும் கொண்டது.


16. மரத்தின்கனிகளில் உள்ள கொட்டைகளைப் பிரித்து சுத்தப்படுத்தி உருத்திராட்சமாக விற்கப்படுகிறது. அதிலுள்ள அறைகளை பொருத்து நல்ல விலை கிடைக்கும்.

17. கோடி புண்ணியம் பெற உருத்திராட்ச மாலையை அணியுங்கள்.

நன்றி ''வளம் தரும் மரங்கள்''

தகவல்: செ. செல்வராஜ்,
புதுக்கோட்டை.

# கந்தவேள் கருணை



[35]

டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

யுத்த களத்தில் அசுர வீரர்கள் பூத
னையைச சூழ்ந்தனர். போர் தொடங்கிற்று.
ர்களில் பலர் கைகால்களை இழந்தனர்.
சேனைத் தலைவர்கள் அசுர வீரர்களில்
ரை அழித்தனர். அவர்கள் இறந்து விழுந்த
ல் பிணங்கள் மலைபோல் குவிந்துகிடந்தன.
ர வெள்ளம் பெருக்கெடுத் தோடியது.
போது சூரனின் படையில் சிறந்ததொரு
னான அதிசூரன் கோபத்துடன் பாணங்
ள மழைபோல் பொழிந்தான். அவனது
லாற்றலைக் கண்ட பூதசேனைகள்
கத்து நின்றன. உக்கிரன் என்ற பூத
னைத் தலைவன் தண்டாயுதத்தை எடுத்
சுழற்றி அதிசூரனின் மார்பில் எறிந்தான்.
தக் கண்ட அசுர வீரர்கள் ''அதிசூரன்
ந்தான்'' என்று அலறினார்கள். உக்கிரன்
ந்த தண்டாயுதம் அதிசூரன் மார்பிலிருந்த
சத்தை அழித்தது. ஆயினும் அவனது உயிர்
கவில்லை. ஆத்திரமடைந்து அதிசூரன்
கிரன் மீது ஆயிரம் பாணங்களை விடுத்
ன். அந்தப் பாணங்கள்தைத்ததால் உக்கிர
உடலிலிருந்து உதிரம் பெருகிப்பாய்ந்தது.
ன் உடலெல்லாம் புண்ணாகியது. பெரி
ஆத்திரமடைந்த உக்கிரன் ஒரு பெரிய

மலையைப் பெயர்த்து அதிசூரன் ஏறிவந்த தேர் மீது வீசினான். அவனது தேர் சுக்கு நூறாக உடைந்து அழிந்தது. அதிசூரன் மற்றொரு தேரில் ஏறிப் போர்ப்புரிந்தான். அந்தத் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அழித்தான் உக்கிரன். அதிசூரன் உக்கிரனின் உடலில் நூறு பாணங்களை விடுத்தான். அவற்றைத் தண்டாயுதத்தால் தடுத்து நிறுத்தினான் உக்கிரன். உக்கிரன் மீது தெய்வாஸ்திரத்தைச் செலுத்த வேண்டுமென்று முடிவு செய்த அதிசூரன்ஆக்கினேயாஸ்திரத்தைவிடுத்தான். அதன் உக்கிரத்தைக் கண்ட உக்கிரன் கந்தவேளின் திருவடிகளைத் தியானித்தான். கந்தக் கடவுள் அவனுக்கு அருள் புரிந்தார். அதிசூரன் வருணாஸ்திரத்தையும், வாயு அஸ்திரத்தையும் நாராயணாஸ்திரத்தையும் விடுத்தான். அவற்றையெல்லாம் தன் இரு கைகளாலும் வாரி விழுங்கிவிட்டான் உக்கிரன். அதனைக் கண்ட அதிசூரன் அதிசயித்து நின்றபோது உக்கிரன் வேகமாகப் பாய்ந்து அசுர சேனையைச் சேர்ந்த வீரர்கள் பலரைக் கொன்றான். எஞ்சிய அசுர வீரர்கள் ஓடினர். உக்கிரனின் செயலைக்கண்ட தேவர்கள் அவனது ஆற்றலை வியந்து பாராட்டினர்.

இந்திரன் பிரமனை நோக்கி, ''அதிசூரன் ஏவிய தெய்வாஸ்திரங்களையெல்லாம் உக்கிரன் வாரி விழுங்கிவிட்டானே; அதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

''உக்கிரன் அரிய தவம் செய்து சிவபெருமானிடம் வரம் பல பெற்றவன். கந்தவேளின் திருவருள் பெற்றவன்; திருமாலின் சக்கராயுதத்தை விழுங்கிய ததீசி முனிவரை விட ஆற்றல் மிக்கவன். ஆகவே, அவன் தெய்வாஸ்திரங்களை விழுங்கியது வியப்புக்குரியதல்ல'' என்று பிரமதேவர் விடை கூறினார்.

யுத்த களத்தில் உக்கிரமாகப் போர் செய்த உக்கிரன் மீது அதிசூரன் சிவபெருமானால் அதிசூரனுக்கு வழங்கப்பட்ட பாசுபதாஸ்திரத்தை விடுத்தான்.

தருமமே உருவமான பரமனின் பெயரைத் தாங்கிய அந்த திவ்வியப்படை அற வழியினின்று அணுவளவும் பிறழாது. இந்தப் பாசுபதாஸ்ரத்தை அசுரனிடம் வழங்கியபோது 'கையில் ஆயுதம் இல்லாதவர் மீது செலுத்தினால் அது அவர்களைத் தாக்காமலும் உன்னிடம் திரும்பாமலும் நம்மிடம் வந்துவிடும்''. என்று சிவபெருமான் அருளியிருந்தார். இப்போது அந்த அஸ்திரம் சீறிக்கொண்டு உக்கிரனைத் தாக்க நெருங்கியது. உடனே அதன் மர்மத்தை அறிந்த உக்கிரன் தன் கையிலிருந்த ஆயுதத்தை தூர எறிந்துவிட்டு நிராயுதபாணியாகத் கைகுவித்து நின்று பஞ்சாட்சர மந்திரத்தை ஜபித்து அதனைத் தொழுதான்; பாசுபதாஸ்திரம் அவனைத் தாக்காமல் சிவபெருமானிடமே சென்றுவிட்டது. அதிசூரன் வியப்பிலாழ்ந்தான். தன் தேரை விரைவாகச் செலுத்தி உக்கிரனுக்கு அருகே வந்து தேரிலிருந்து இறங்கி தண்டாயுதத்தைச் சுழற்றி உக்கிரன் தோள் மீது வீசியெறிந்தான். அந்தத் தண்டாயுதத்தைப் பிடுங்கிய உக்கிரன் அதனாலேயே அதிசூரனின் மார்பில் ஓங்கி அடித்தான். அதிசூரனின் மார்பு பிளந்தது. பெயருக்கேற்ப அதிசூரனாகவே இருந்த வீரனும் மரணமடைந்தான்.

அதிசூரன் இறந்ததைக் கண்ட அசுரேந்திரன் சீறிப்பாய்ந்து பூத சேனைகளைத் தாக்கத் தொடங்கினான். அவன் விடுத்த பாணங்களால் பூதர்களில் பலர் இறந்தனர். பூதப் படையைச சேர்ந்த கனகன் அசுரேந்திரனுடன் போர் செய்தான். அசுரேந்திரன் ஆயிரக்கணக்கில் பாணங்களை விடுத்ததால் கனகன் மயங்கி விழுந்தான். உடனே பூதப் படையைச் சேர்ந்த உன்மத்தன் என்பவன் யுத்த களத்தில் இறங்கினான். அசுரேந்திரனின் பாண மழையில் அவனும் மயங்கி விழுந்தான். பூதப் படையைச் சேர்ந்த மந்தன், சிங்கன், தண்டகன், கோமுகன், விசயன் ஆகியோர் அசுரேந்திரனுடன் போர் செய்து தோற்றார்கள். இதனைக் கண்ட வீரவாகுதேவர் தாமே கோபத்துடன் அசுரேந்திரனுடன் போர் செய்ய முன்வந்தார். ஆக்ரோஷமாகப் போரிட்டு அவனது தலையை அறுத்தார். தேவர்கள் மலர்மாரிப் பொழிந்து மகிழ்ந்தனர். அசுரப்படைகள் சிதறியோடின.

அதிசூரனும் அசுரேந்திரனும் போர்க்களத்தில் இறந்ததையும் அசுர சேனைகள் சிதறி ஓடுவதையும் கண்ட சூரபன்மன் வடவாமுகாக்கினிபோல கனன்று எழுந்தான். தானே போரில் குதிக்க வேண்டியதுதான் என முடிவு செய்தான். தனது தேரில் ஏறிப் போர்க்களம் வந்து தனுசைவளைத்து நாணை மீட்டிப் பெரும் ஒலி எழுப்பினான். அந்த ஒலியைக் கேட்ட பூதசேனைகள் அஞ்சி நடுங்கின. அச்சங்கொண்ட அவர்கள் தலைவிரிகோலமாக ஓடினர். சூரபன்மனின் நாணொலியின் ரீங்காரம் பன்னிரண்டு ஆண்டுகள் வரை விடாமல் ஒலித்தது. அந்த ஓசையைக் கேட்டு நாராயண மூர்த்தியே தமது தலையை அசைத்தார். பிரமன், இந்திரன், இயமன் ஆகியோர் தங்களுக்கு என்ன நேருமோ என்று அஞ்சினர்.

பூதசேனைத் தலைவர்கள் நூற்று எண் மரும் மனத்தைத்திடம் செய்துகொண்டு சூரபன்மன் மீது மலைகளையும் மரங்களையும் வீசியெறிந்தார்கள். சூரபன்மன் பத்து லட்சம் கோடி பாணங்களை விடுத்துத் தன்மீது வந்த மலைகளையும், மரங்களையும் துகள்களாக்கினான். பூதசேனைத் தலைவர்கள் நூற்றெண் மரும் வருந்திச் சேர்ந்து மயங்கினர். இலக்கம் வீரர்களையும் கண் பஞ்சடைந்து போகச் செய்தான் சூரன். வீரமார்த்தாண்டர், வீரராக்கதர், வீரமகேந்திரர், வீரதீரர், வீரமகேச்சுரர், வீரகேசரி, வீரபுரந்தரர், வீராந்தகர் ஆகியோரையும் சூரபன்மன் தோல்வியடையச் செய்து எதிர்ப்பவர்கள் எவருமின்றிப் போர்க்களத்தில் உலவிக் கொண்டிருந்தான்.

வீரவாகுதேவர் தேரில் ஏறிச் சூரபன்மன் இருக்கும் இடத்துக்குச் சென்றார். ''முன்பு வந்து நம் நகரத்தை அழித்துச் சென்றவன் இவன்தான்'' என்பதைச் சூரன் அறிந்ததும் பெருங் கோபம் கொண்டு வீரவாகுவை இழித்தும் பழித்தும் பேசினான். அதன்பின் இருவருக்குமிடையே அதிகோரமான போர் மூண்டது. வீரவாகுதேவர் சூரபன்மனின் நெற்றியைக் குறிவைத்து எய்த பாணங்கள் வைரமாலையைத் தாக்கிய பொன்ஊசிகளைப்போல முனை மழுங்கித் துகளாகி வீழ்ந்தன. வீரவாகுத்தேவர் வாயுவாஸ்திரம், அக்கினி அஸ்திரம் சூரியாஸ்திரம், வருணாஸ்திரம், இந்திராஸ்திரம், நிருதி அஸ்திரம் முதலிய தெய்வாஸ்திரங்களை ஏவினார். அந்தத் தெய்வப் படைக் கலங்களும் சூரபன்மனின் உடலில் பட்டு வலிமையிழந்து அழிந்தன.

சூரபன்மனின் அளப்பரும் ஆற்றலைக் கண்டு வியந்த வீரவாகுதேவர் பிரம்மாஸ்திரத்தையும் நாராயணாஸ்திரத்தையும் ஏவினார். அவையும் தமது ஆற்றல் ஒழிந்து அழிந்தன. சூரபன்மன் பெற்றுள்ள வரங்களின் சிறப்பையும் அவனது வல்லமையையும் எண்ணி வியந்து நின்றார் வீரவாகுதேவர்.

சூரபன்மன் வீரவாகுதேவரை நோக்கிக் கொக்கரித்தான்; ''அற்பனான தூதனே! மும்மூர்த்திகளுக்கும் முதல்வராகிய தேவதேவன் சிவபெருமான் தந்தருளிய வரங்களின் மகி

மையினால், எந்தத் தெய்வாஸ்திரத்தை என் மீது ஏவினாலும் என்னை வெல்ல முடியாது'' என்று ஆர்ப்பரித்தான்.

தேவாதிதேவனான சிவபெருமானின் பெயர்பூண்ட அஸ்திரமே எஞ்சியிருந்தது. வீரவாகுதேவர் பாசுபதாஸ்திரத்தை எடுத்து வழிபாடு செய்து சூரபன்மன் மீது பிரயோகித்தார். அந்த அஸ்திரம் வடவாமுகாக்கினிபோன்று இடி மின்னல்களுடனும் விஷத்துடனும் இருளைப் பரப்பி ஆரவாரத்துடன் சென்றது. அதிவேகமாக ஆரவாரம் செய்து வரும் பாசுபதாஸ்திரத்தைக் கண்டதும் சூரபன்மன் தன்னிடமிருந்த பாசுபதாஸ்திரத்தை எடுத்து வழிபாடு செய்து ஏவினான். இரண்டு சிவாஸ்திரங்களும் பிரபஞ்சங்கள் எல்லாம் அஞ்சி நடுங்கும்படி போரிட்டுத் தம்மை விடுத்தவர்களிடமே திரும்பிச் சென்றுவிட்டன. பிறகு இருவரும் முத்தலை பாணம், வேல், தண்டாயுதம் இவற்றால் போர் செய்து கொண்டார்கள்.

சூரபன்மனின் தண்டாயுதம் வீரவாகு தேவரின் மார்பைத் தாக்கியது. அவரது உடலிலிருந்து உதிரம் ஊற்றெடுத்து ஆறுபோல் ஓடியது. வீரவாகுதேவர் செயலற்றுத் தேரின் மீது வீழ்ந்தார். தேவர்கள் கதிகலங்கினர். அப்போது வீரவாகுதேவரின் தேர்ச்சாரதியாகிய வீசாலி தேரை ஒருபக்கமாகச் செலுத்தினான். சூரபன்மன் வீரவாகுதேவர் ஒருவாறாக ஒழிந்தார் என்று எண்ணிப் பூதசேனைகளின் மீது பாணங்களைச் சூறாவளிபோல் விடுத்தான். பூதசேனையைச் சேர்ந்தவர்களில் எண்ணற்றவர் இறந்தனர். எஞ்சியவர்கள் பயந்து ஓடினர்.

பூதசேனைகளும், வீரவாகுதேவரும் போர்க்களத்தில் வலியிழந்து சின்னாபின்னப் பட்டிருப்பதையறிந்த கந்தவேள், தமது சாரதியாகிய வாயுதேவனைப்பார்த்து, ''நமது தேரை வேகமாகச் செலுத்தி சூரபன்மன் முன் கொண்டுபோய் நிறுத்து'' என்று ஆணையிட்டார். அதன்பின் நவரத்தினமயமான அந்தத் தேரை மனோவேகத்தில் ஓட்டிக்கொண்டு போய்ப் போர்க்களத்தில் இறுமாந்திருந்த சூரபன்மன் முன் நிறுத்தினார் வாயுதேவன்.

''சூரபன்மனும் எம்பெருமானும் முதன் முறையாக சந்தித்தனர். பயங்கரமான அந்தப் போர்க்களத்தில், பகைமை தலைவிரித்தாடும் யுத்த பூமியில் கருணைவழியும் முகத்துடன் காட்சிதந்தார் கந்தப்பெருமான்.

''முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரம்ஈ ராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமும் தெரியக் கண்டான்''.

தாமரை மலர்ந்தது போன்ற குளிர்ந்த திருமுகங்களையும், பன்னிரு கண்களையும் பன்னிரு குண்டலங்களையும், திருமுடிகளையும், அழகிய திருமார்பினையும், பன்னிரு திருக்கரங்களையும் விளங்குகின்ற ஆயுதங்களையும் தண்டையும் சிலம்பும் ஒலிக்கின்ற திருவடிகளையும் சூரன் கண்டான்.

''பூவுலகு அண்ட மெல்லாம் புரந்திடுஞ் சூரன் தன்னை
தீவினை யாளன் என்றே செப்புவர்; சிறப்பின் மிக்க
மூவிருமுகத்து வள்ளல் முன்னர்வந் தெய்தப் பெற்றான்
ஆ! இவன் தவத்திற்கன்றி அறத்திற்கும் முதல் வன் அன்றோ''.

எல்லோரும் சூரபன்மனைக் கொடியவன் தீவினையாளன் என்று சொல்லுவார்கள். அவன் எத்துணைக்காலம் தவம் செய்திருந்தால் ஆண்டவன் அவனுக்குக் காட்சி தருவார்? அவன் தவம் மட்டும் அல்ல; அறமும் செய்திருக்கிறான். கண்ணுக்குத் தெரியாமல் முந்தைய ஜென்மத்தில் செய்திருக்கிறான். தேவர்களும் முனிவர்களும் இன்னமும் இத்தன்மையன் என்று கண்டுகொள்ள முடியாத பரம்பொருளை நன்றாகக் கண்டவன் அன்றோ சூரபன்மன்?''

''இன்னமும் முனிவர் தேவர் யாவரும் இனையன் என்றே
உன்னருந் தன்மைத் தாகும் ஒருதனிக் குமரன் தன்னைத்
தன்னிரு விழியால் கண்டான் தானவர்க் கிறைவன் என்றால்
அன்னவன் தவத்தின் பேற்றை ஆரறிந் துரைக்கற் பாலார்''.

என்று கச்சியப்பர் வியந்து சொல்லுகிறார்.

சூரபன்மன் முருகனை நோக்கி, உன் சேனைகள் முழுவதும் வலியிழந்து அழிந்தன. மற்றை வீரர்களும் தூதுவந்த வீரவாகுவும் அழிந்தனர். சிறுவனாகிய நீ என்னுடன் போர் செய்ய வருகின்றாய். உன் தந்தையாகிய சிவபெருமானும் நான்முகனும் திருமாலும் என்னுடன் போர்புரிய வேண்டும் என்று எண்ணியதில்லை. முன்னாள் வலியிழந்து அழிந்த கிரவுஞ்ச மலையையும், தாரகனையும்போல் என்னை எண்ணாதே! என் வரங்களையும் வலிமையையும் பிறவற்றையும் நீ சிந்திக்கவில்லை. பூதசேனைகள் புறங்கொடுத்து ஓடிவிட்டன. கடைசியில் சின்னஞ்சிறு குழந்தையான நீ என்னுடன் போர்செய்ய வந்திருக்கிறாய்? தேவர் யாவரும் வருந்த என்வில் வலியால் ஓர் விநாடியில் உன் வலியை அழிப்பேன்'' என்று கூறினான்.

சூரபன்மன் கூறியதைக் கேட்டு எம்பெருமான் புன்னகை புரிந்தார்.


—தொடரும்


சித்திர பாரதம்
கதை:- செவ்வேள்
படம் M.N.ராஜா
சிசுபாலனின் உயிர் கண்ணன் திருவடியை சேர்ந்ததற்கான காரணத்தைக் கூறுகிறார் வியாசர். "ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீமந் நாராயணர் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தைக் காத்து நிற்கும் இரு வாயிற் காவலர்கள் ஜய விஜயர்கள்"
பரமபதப் பெருமானைத் தரிசிக்க வந்த துருவாச முனிவரைத் தடுத்து நிறுத்தினார்கள் ஜயவிஜயர்கள்
இப்பொழுது உள்ளே அனுமதிக்க மாட்டோம்.
ஆ! என்னையா தடுத்தீர்கள் உங்கள் அதிகாரப் பதவிகளை இழந்து பூலோகம் போய் பிறக்கக் கடவீர்!
திருமாலே வந்து துர்வாசரை வரவேற்று உபசரித்தார்
இவர்களுக்குச் சாபவிமோசனம் கூறுங்கள்.
பெருமானே! தங்கள் பக்தராய் இவர்கள் ஏழு பிறப்பு பிறக்க வேண்டும். அல்லது தங்கள் பகைவராய் மூன்று பிறப்பு பிறக்க வேண்டும்.
உங்கள் விருப்பம் என்ன?
சுவாமி அதிகக்காலம் உங்களைப் பிரிந்து வாழோம். மூன்று பிறவிகளே பிறந்து உம் திருவடிப் பேறு பெற விரும்புகிறோம்.
கிருதயுகத்தில் ஜயவிஜயர்கள் இரணியன், இரணியாக்கனாகப் பிறந்தார்கள். நரசிம்ம மூர்த்தியாய் இரணியனையும், வராக மூர்த்தியாய் இரணியாக்கனையும் வதம் புரிந்தார் திருமால்.


"திரேதாயுகத்தில் ஜயவிஜயர்கள் இராவணனும், கும்பகர்ணனுமாகப் பிறந்தார்கள் திருமால் இராமாவதாரம் புரிந்து அவர்களை வதம் புரிந்தார்."
"இத்துவாபர யுகத்தில் கம்சனும், சிசுபாலனுமாகப் பிறந்தவர்களும் ஜயவிஜயர்களே! சிசுபாலன் கண்ணனின் அத்தை சுருதசிரவையின் மகனாகப் பிறந்தான்.
"இவன் பிறந்தபோது நான்கு கைகள், மூன்று கண்கள் கொண்டவனாகப் பிறந்தான். ஒருநாள் கண்ணன் வந்து குழந்தையைத் தூக்க அதிகப்படியான இரு கைகளும், நெற்றிக் கண்ணும் மறைந்தன. சுருதசிரவையின் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. "கண்ணனின் சக்ராயுதத்தால் சிசுபாலன் மடிவான்" என்று எழுந்தது ஓர் அசரீரி.
கண்ணா! என் மகனை நீ கொல்லக் கூடாது இவ்வரம் தா"
இவன் செய்யும் நூறு பிழைகளை நான் பொறுப்பேன்
"சிசுபாலன் கண்ணனை நிந்திப்பதே குணமாகக் கொண்டான். கண்ணன் ருக்மணியை மணம் செய்ய, அவன் பகை மேலும் வளர்ந்தது."
"இன்றும் அவன் நிந்தனை எல்லை மீறிப் போகவே சிசுபாலனைத் தம் சக்ராயுதத்தால் வதம் செய்தார். துர்வாசரின் சாபமும் இன்றோடு தீரவே அவன் கண்ணனின் திருவடிப் பேறு பெற்றான்." இவ்வாறு வியாசர் விளக்கமாகக் கூற எல்லோரும் கிருஷ்ணரைப் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.

# மலை - மந்திர் முருகன்

பேராசிரியர் தேவ. நடராஜன்



பேராசிரியர் தேவ. நடராஜன்
அரசு துணைச் செயலர்(நிதி), சென்னை.

ஓங்காரம் 'அ' 'உ' 'ம' என்ற மூன்று எழுத்தின் சேர்க்கையாகும். 'அ' என்ற எழுத்து படைத்தல் தொழிலையும், 'உ' என்ற எழுத்து காத்தல் தொழிலையும், 'ம' என்ற எழுத்து ஒடுக்கத் தொழிலையும் குறிக்கின்றன. இவ்வாறு முத்தொழிலுக்கும் மூலகாரணமாக விளங்கும் முழு முதல் மந்திரம் ஓங்காரமேயாகும். இந்த மூன்று எழுத்தில் தனி சிறப்புப் பெற்ற எழுத்து நடுநாயகமாக விளங்கும் 'உ' என்ற எழுத்தேயாகும். எல்லா உயிர்களையும் எல்லா உலகங்களையும் காப்பாற்றுகின்ற எழுத்து இந்த 'உ' காரமேயாகும். முருகன் என்ற சொல்லில் இந்த 'உ'கரம் மூன்று முறை வருகிறது. முருகன் என்ற சொல், 'முருகு' என்ற சொல்லில் இருந்து பிறந்தது. இந்த சொல்லில், மு-ம்-உ, ரு-ர்-உ; கு-க்-உ என்ற வகையில் உகரம் மூன்று முறை ஒலிக்கின்றது. இத்தகைய சிறப்புடைய சொல் வேறில்லை. யாவரும் விரும்புவது மூன்று சுகம். அதுவே இகம், பரம், வீடுபேறு என்பதாகும். இந்த மூன்று பெறும்பேறுகளையும் சுகங்களையும் தந்தருளும் தனிப்பெரும் தெய்வம் முருகன் தான்.

பண்டைக்காலம் தொட்டு தமிழ் மக்கள் இயற்கை செல்வத்தை பெரிதும் போற்றினர். இப்படியாக, இன்று விஞ்ஞான ரீதியில் சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருத்தினை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பண்டைக்காலத் தமிழ் மக்கள் உணர்ந்து, இயற்கையைப் போற்றி இயற்கையிலேயே இறைவன் விளங்குகிறார் என்பதனைப் பாமர மக்களும் உணரும் வகையில் இயற்கை எழில் தவழும் குன்றுகளில் எல்லாம் இயற்கை கடவுளாக அழகின் வடிவமான முருகக்கடவுள் உறைவதாகப் போற்றி வழிபட்டனர். தமிழ்நாட்டில் முருகக்கடவுள் வெகுசிறப்பாக கொலுவீற்றிருக்கும் இயற்கை எழில் கொஞ்சும் குன்றுகள் ஆறு என்று சொல்லும் நக்கீரர், தனது முருகாற்றுப்படையில் குமரக்கடவுள் சிறப்பாக கொலு வீற்றிருக்கும் அந்த ஆறு தலங்களைப் பற்றி விரிவாக விளக்கியுள்ளார். அப்படி விளக்கும் நக்கீரர், குமரக்கடவுள் எல்லாக் குன்றுகளிலும் ஆடும் குமரகுருபரன் என்றும் போற்றுகின்றார். ஆக எல்லா குன்றுகளிலும் முருகன் சிறப்பாக விளங்கி மக்களுக்கு பேரருள் புரியக் கூடிய பெருந்தெய்வம் என்பதை நக்கீரர் தெளிவாக உணர்த்துகின்றார். தமிழ்நாட்டிலே அருள்மிகு சுப்பிரமண்ய சுவாமி கோயில் ஏறத்தாழ எல்லா ஊர்களிலும் அழகுற உருவாகி உள்ளது. ஆனால் வட இந்தியாவில் விந்திய மலைக்கு வடக்கே ஒரு ஓரே சுப்பிரமணியசுவாமி கோவில்தான் விளங்குகின்றது. சிறப்புற விளங்கி மேலும் மேலும் தன்னருகே பல திருக்கோயில்களையும் அது உருவாக்கி ஓங்கி வளர்ந்து வருகின்றது. அதுவே புது டெல்லியில் இராமகிருஷ்ணபுரத்தில் விளங்கும் புகழ்பெற்ற மலை-மந்திர் என்ற முருகன் கோவிலாகும். இது உருவாகிய வரலாறே மிகச் சிறப்பானதாகும். இது 1973-ல் கட்டி முடிக்கப்பட்ட திருக்கோயிலாகும். முதலில் கார்த்திகேயன் ஆன சுவாமிநாத பெருமாளுக்கு ஒரு சிறு குன்றின் மீது அழகான மலைத் திருக்கோவிலும் அதன் அருகில் கணபதி திருக்கோவிலும் உருவாகின.

இத்திருக்கோயிலின் பூர்வீகம் போற்றத்தக்க ஒன்றாகும். முதலில் முருகன் படத்தை தமது வீட்டில் வைத்து ஒவ்வொரு நாளும் தவறாமல் முறையாக பூஜை செய்து வந்த பெரியார்கள்- முருகனின் திருஉருவப் படத்தை வீதி வலம் வரச் செய்த வள்ளல்கள் அரும்பாடுபட்டு முருகன் திருவருளால் டெல்லி எங்கும் புகழ்பெற்றதும் மலை-மந்திர் என்றால் அனைவரும் அறியக்கூடியதுமான இந்த முருகன் திருமலைக்கோயிலினைக் கட்டினார்கள்.

இத் திருக்கோயிலின் அமைப்பு, தஞ்சை மாவட்ட சுவாமி மலைக் கோயில் போன்றதாகும். இத்திருக்கோயிலில் இருந்து திருவருள் புரியும் தெய்வமூர்த்தம், திருநெல்வேலியில்

இருந்து வந்த குறுக்குத்துறை பாறையிலிருந்து தெய்வ சங்கல்பமாக உருவாக்கப்பட்டதாகும்.

இத்திருக்கோயிலின்சிறப்பு, ஒன்று இரண்டல்ல; பலவாகும். சோழர்கால கோயில் பாணியில் முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்ட டில்லியில் உள்ள இத் திருக்கோயில் இது ஒன்றுதான். இதற்கு ஏறத்தாழ ஆயிரம் டன் எடைக்கு மேற்பட்ட நல்ல கருங்கற்கள் திருநெல்வேலிகுறுக்குத்துறைப்பாறைகளில்இருந்து கொண்டுவரப்பட்டன. சென்னைக்கு அருகேயுள்ள மகாபலிபுரத்தில் உள்ள தமிழக அரசின் சிற்பக்கலை பள்ளியில் சிறப்புற பயிற்சி பெற்றுள்ள சிற்பக் கலைஞர்கள், புகழ்பெற்ற திரு. கணபதி ஸ்தபதியின் மேற்பார்வையில் இத் திருக்கோயிலைக் கட்டினர். ஆகம சாஸ்திர கோட்பாடுகள்படி கட்டப்பட்ட இத்திருக்கோயில் உருவாவதற்கு, தெய்வ வழிகாட்டியாக விளங்கியவர் வாழும் தெய்வமாக விளங்கும் அருள்மிகு ஜெகத்குரு ஸ்ரீசந்திரசேகேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆவார்கள். காஞ்சி சங்கர மடப் பரமாச்சாரிய சுவாமிகளின் தெய்வகடாட்சமே இத்திருக்கோயில் வளர்ச்சிக்கு இன்றும் உறுதுணையாக இருந்து வருகின்றது. நமது **மேதகு குடியரசுத் தலைவர் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன்** அவர்களும் இத் திருக்கோயிலின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்கள். அவர்களே இத்திருக் கோயிலுக்கு தலைமைப் புரவலராக இருக்கின்றார்கள்.

இத்திருக்கோயில் 1973ல் தோற்றுவிக்கப் பட்டுக் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. தென்னிந்திய சிற்பக்கலையின் திறமையை எடுத்துக் காட்டும் வகையில் இத்திருக்கோயில் ஒரு ''சிற்பக்கலை மண்டபமும்'' இருக்கின்றது. காஞ்சித்திருக்கோயிலில் காணக்கூடிய அற்புதமான கல்லிலான சங்கலிகளைப் போன்றே இங்கும் கருங்கற் சங்கிலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்ட ஆவுடையார் கோயிலில் உள்ள சிற்பக்கலை நுணுக்கங்களையும் இங்கு பார்க்கலாம். கையினால் உருட்டினால் உருளக்கூடிய கருங்கற் பந்துக்களைத் தனது வாயில் அடக்கிய சிங்க உருவங்களையும், சிற்பக்கலையின் உயர்வினை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த நந்தினி உருவம் ஒன்றினையும் கூட இங்கு காணலாம். தென்னிந்திய சிற்பக்கலையின் உயர்வினை உணர்த்தும் ஒரு ஒப்பற்ற கலைக்கூடமாக இந்த சிற்பக்கலா மண்டபம் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. மலைமேல் உள்ள முருகன் கோயில் சோழர் காலப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இத்திருக் கோயில் ஒரு கோயில் மட்டுமல்ல; 'பல திருக்கோயில்களையும் தன்னகத்தே கொண்ட தெய்வீகத் திருக்கோயில் கூட்டமாக உருவாகி வருகின்றது. அருள்மிகு சுந்தரேசப் பெருமான் மற்றும் அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கும் குன்றின் அடிவாரத்தில் இரு திருக் கோயில்கள் உருவாகி வருகின்றன. அவை பல்லவ மற்றும் பாண்டியத் திருக்கோயில்கள் பாணியில் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு



இந்திய தலைநகரம் டில்லியில், சோழ, பல்லவ பாண்டியப் பாணியில் அமைந்துள்ள கோயில்களை ஒரு சேர பார்க்கக்கூடிய ஒரு தெய்வீகக் கலைப் பொக்கிஷமாக இத்திருக்கோயில் விளங்குகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 19,20 மற்றும் 21-ஆம் தேதிகளில், சூரியக் கடவுளின் ஒளிக்கதிர்கள் நேரே திருமுருகன் மீது திகழ்ந்து அஞ்சலி செலுத்துகின்றன. இத்தகைய சிறப்பான அமைப்பினை உடைய திருக் கோயில்கள் ஒரு சிலவே இருக்கின்றன.

தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தில் உள்ளது தென் சுவாமிமலை என்றால், டில்லி இராமகிருஷ்ணபுரத்தில் உள்ள இப் புகழ் பெற்ற இந்த மலை-மந்திர் முருகன் கோயில் ''உத்தர சுவாமிமலை'' ஆகும். ஆண்டுதோறும் ஸ்கந்த சஷ்டி உற்சவம் சிறப்பாக இத் திருக்கோயிலில் கொண்டாடப் பெறுகின்றது. சென்ற ஆண்டு (1989) அக்டோபர் மாதம் 21 முதல் 30-ஆம்தேதிவரை இந்தவிழா நடந்தது. பல்லாயிரம் காவடிகளைச் பக்தர்கள் பக்தி பரவசத்துடன் சுமந்து வந்த காட்சி தெவிட்டாத ஒரு தெய்வீகத் திருக்காட்சியாகும். இத் திருக்காட்சிகாணத் திரண்டு வந்த மக்கள் திருவருள் பெற்றவரேயாவர்.

புதுடில்லி இராமகிருஷ்ணபுரம் ''மலை-மந்திர்'' உத்தர-சுவாமிமலை முருகன் அருள் பெற அனைவரும் வருக. இத்திருக்கோயில் மேலும் வளர நிதி மிகுந்தவர் பொற்காசு தரலாம்; ஆண்மையாளர் உழைப்பினை நல்கலாம்; மதுரத் தேன்மொழி மாந்தர்கள் எல்லாம் முருகன் பூஜைக்கு உகந்தன செய்யலாம். வாழ்க ''மலை-மந்திர்'' வளர்க முருகன்! திருவருள்.

**ஓம் முருகா ஓம் முருகா ஓம்.**

# கம்பரின் ராமாவதாரம்



டாக்டர் த. அமிர்தலிங்கம் [24]

இராமரின் மனம் பொன்மனம். பரதனின் மனமும் இராமரின் மனத்திற்கு ஒப்பான பொன்மனமே. இல்லாவிடில் இராமரைக் காட்டிற்கு ஓட்டிய கொடுமனக் கூனியை மன்னிக்க மனம் வருமா? இராமரை எண்ணித்தான் தண்டிக்கப்படவேண்டியவளான மந்தரையையும் மன்னிக்குமாறு சத்ருக்கனனைக் கட்டாயப்படுத்தி இணங்க வைக்கிறான் பரதன். மந்தரையும் ''விட்டால் போதும்'' என்று சத்ருக்கனின் பிடி தளர்ந்ததுமே விடுபட்டு வந்த வழியே திரும்பி தன் இருப்பிடத்திற்கே ஓடிவிடுகிறாள்.

மந்தரை ஒருத்தியை மட்டும் அயோத்தியிலே இருக்கவிட்டு கடலெனத் திரண்ட மற்ற எல்லோருடனும் வனம் நோக்கிப் புறப்படுகிறார்கள் பரதசத்ருக்கனர்கள். சூரியன் அஸ்தமனமாகும் நேரத்தில் இராமர் முதல்நாள் இரவு தங்கிய அயோத்தியின் எல்லையிலிருக்கும் சோலைக்கு வந்து சேருகிறார்கள். ''மக்கள் வெள்ளத்துடன் இராமர் தங்கிய சோலை இதுதான். மக்கள் உறங்கும் வரை அவரும் உறங்குவதாக பாவனை செய்திருந்தார். பிறகு மக்கள் அயர்ந்துறங்கிய அந்த நள்ளிரவில் அயோத்தியை நோக்கித் தேரைச் செலுத்துமாறு எனக்கு உத்தரவிட்டு, தாமும் அப்பொழுதே சீதையுடனும் தம்பியுடனும் வனம் நோக்கி நடந்தார் என்று சுமந்திரன் கூற, இராமர் படுத்திருந்த தரையைத் தத்தம் கண்ணீரால் குளிப்பாட்டுகிறார்கள் பரதசத்ருக்கனர்கள்; புல்தரையிலேயே உறங்கியும் உறங்காமலும் பொழுதைக் கழிக்கும் பரதசத்ருக்கனர்கள் இராமர் அங்கிருந்து கால்நடையாகக் கானகம் புறப்பட்டதை எண்ணித் தாமும் தேரில் ஏறாமல் நடந்தே செல்கிறார்கள்.

வைகறைப் போதில் கோசல நாட்டின் எல்லையை நீங்கிப் பரதன் காட்டிற்குள் காலடி வைத்ததைக் கூறவரும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ''காவிரி பாயும் சோழவள நாட்டை ஒத்த கழனிகளை உடைய கோசல நாட்டை நீங்கி அவர்கள் எல்லா உயிர்களும் பரிதவிக்கப் புறப்பட்டார்கள்'' என்று கூறுகிறார். ''காவிரி நாடன்ன கழனி நாடொரீஇ''என கம்பர் உவமிப்பது அவர்தம் தாய்நாட்டுப் பற்றினைக் காட்டும் சிறந்தொரு சான்றாகும்.

பரதனைத் தொடர்ந்து கானகம் சென்ற சேனைகள் அறுபதினாயிரம் அக்குரோணிகள் ஆகும். யானைகள் 21870, தேர்கள் 21870, குதிரைகள் 65610, காலாள்கள் 109350 ஆக மொத்த எண்ணிக்கையில் 218700 கொண்டது ஒரு அக்குரோணி ஆகும். இவ்வாறான அறுபதினாயிரம் அக்குரோணி சேனைகள் பரத

னைப் பின்தொடர்கின்றன. இவ்வெண்ணிக்கையில் அயோத்தியில் வாழும் மக்கள் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை. இவ்வாறு அறுபதினாயிரம் அக்குரோணி சேனைகளும், அளவிறந்த மக்கள் வெள்ளமும் பரதனைப் பின் தொடர்வதால் எங்கும் யானைகளாக, எங்கும் குதிரைகளாக, எங்கும் தேர்களாக, எங்கும் மக்கள் தலைகளாகவே தெரிகின்றனவேஅன்றி மண்ணின் தரை காணப்படவில்லை என்று வர்ணிக்கிறார் கம்பர்.

'யானை வரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே' என்பது பழமொழி. அளவிறந்த சேனை பின்னே வருவதை விண்ணை மூடியவாறு பரந்த தூசிக் கூட்டத்தைக் கண்டு உணர்ந்துகொண்டு விடுகிறான் கங்கைக்கரைக் காவலனான குகன். கங்கையாற்றின் தென் கரையில் வீற்றிருக்கிற குகன் கங்கையைநோக்கி ஒரு பெரும்படை வருவதை விண்ணை மூடியவாறு பரந்து தோன்றிய தூசிப்பட்டாளத்தால் உணர்ந்துகொண்டவனாய் ''வருகிறது பெரும் படை. அயோத்தி இருக்கும் திசையிலிருந்து படைவருவதால் அது பரதனின் படையாகவே இருக்கவேண்டும். வஞ்சனையால் அரசைப் பறித்துக்கொண்டு இராமரைக் காட்டிற்கு விரட்டியது போதாது என்று அவர் ஆருயிரையும் பறிக்க எண்ணிப் போர்புரிய பெரும்படையோடு வருகிறான் போலும்'' என்று பரதனின் வருகைக்கான காரணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு விடுகிறான் குகன். சூழ்ச்சி செய்து அரசர்களின் பதவியைப் பறிப்பது, துணைப் பலமின்றிப் தனித்து அவர்கள் இருக்கும்போது படையெடுத்துப்போய் மோதி அவர்களை அழிக்க முயல்வதுமான ஒரு நடைமுறை நாட்டில் இருப்பதை குகனும் அறிவான் அல்லவா? ஆகவேதான் பரதன் பெரிய படையோடு வருவதைத் தவறாகப் புரிந்துகொண்டு ஆத்திரப் படுகிறான் குகன்.

''இராமருக்குத் துணையாரும் இருக்க மாட்டார்கள் என்றா அவரைக் கொல்லப் படையோடு வருகிறாய் பரதா! இதோ குகன் நான் அவருக்கு உற்ற துணையாக இங்கே இருக்கிறேன். யமனை நிகர்க்கும் ஐந்துலட்சம் வில்வீரர்கள் என்னுடன் இருக்கிறார்கள். பரதா! உன்படை எலிப்படை. நான் எலிகளை எல்லாம் விழுங்கிவிடும் பாம்பு. போருக்கு வருகிறாயா? வாவா! என் ஆருயிர் இராமனைக் காட்டிற்கு விரட்டிய உன்னை இனியும் நான் விட்டுவைக்க போவதில்லை'' என்று மனதிற்குள் குகன் கறுவிக் கொண்டவனாய்த் தன்னைப் போர்க்கோலம் செய்து கொண்டு விடுகிறான். வாளை இடுப்பில் கட்டிக்கொண்டு, வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு, துடி எடுத்து முழக்கி, ஊதுகொம்பையும் எடுத்து ஊதி உடன் தன் கூட்டத்தினர் அனைவரும் தானிருக்கும் இடத்திற்கு வருமாறு உணர்த்துகிறான் குகன். கோபாவேசத்தால் குகனின் வாய் அதரங்கள் துடிப்பதையும், கண்களில் தீப்பொறிகள் பறப்பதையும், புருவங்கள் மேலேறுவதையும், தோள்கள் புடைப்பதையும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் காட்டும் பாடல்கள் இவை.

''குகனெனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளின் நோக்கு
நகைமிகக் கண்கள் தீநாற நாசியிற் [வான்
புகையறக் குனிப்புறும் புருவப் போர்விலான்''

''கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கட் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
கிட்டியது அமரெனக் கிளர்ந்த தோளினான்''

''எலியெலாம் இப்படை அரவம் யான்எனா
ஒளியுலாஞ் சேனையை உவந்து கூயினான்
வலியுலாம் உலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெல்லாம் ஒருவழி புகுந்த போலவே''.

புலிகளின் கூட்டம் திரண்டு வருவதைப் போலவே குகனின் வில்படை வீரர்களும் வந்து குகனைச் சூழ்ந்து நிற்கிறார்கள். ''வீரர்களே! அதோ வந்து கொண்டிருப்பது பரதனின் வஞ்சகப்படை. வஞ்சகம் செய்து நம் ஆருயிர் நாயகரைக் காட்டிற்கு விரட்டிய பரதனையும் அவன் படைகளையும் நாம் கொல்லவேண்டும். இராமருடனே போய் காட்டில் தங்கிவிட வேண்டும் என்று நான் எண்ணினேன். இராமர் அதை மறுத்துக்கூறியது இப்பொழுது எனக்கு என்கடமையைச் செய்யும் வண்ணம் நல்லதேயாயிற்று. வடகரையிலிருக்கும் நமது ஓடங்களை எல்லாம் கொண்டுவந்து தென்கரையில் நிறுத்துங்கள். இந்தக் கங்கையைக் கடந்தால் அல்லவா அவர்கள் இராமரிருக்கும் இடம் போகமுடியும்! அண்ணன் என்று எண்ணிடாமல் இராமரைக் காட்டிற்கு விரட்டி, இப்போது துணையின்றித் தனித்திருக்கும் அவரைக் கொல்வதற்காகவே படையையும் திரட்டி வந்து இருக்கிறான் பரதன். மண்ணாசை கொண்ட அரசர்களுக்குச் சொந்தபந்தம், தருமநியாயம் எல்லாம் ஒன்றும் கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு நாம்தான் புத்தி கற்பிக்கவேண்டும். வரும் படைகள் மேல் தீஉமிழக்கூடிய உங்கள் அம்புகளைச்செலுத்துங்கள். அம்புக்குத் தப்பிவந்தால் அவர்களை வாள் கொண்டு வெட்டுங்கள். பிணங்களால் இந்தக் கங்கையாற்றைத் தூர்த்துவிடுங்கள். அளவிறந்த சேனையோடு பரதன் வந்தால் அவனுடைய படையைக் கண்டு-யானைகளைக் கண்டு நாம் அஞ்சி விடுவோமா? வேடுவர்களாகிய நாம் விடும் சரம் வேந்தர்கள் நெஞ்சில் போய் தைக்காதா? வானவர்களும் சேர்ந்து பரதனுக்குத் துணையாக வந்தாலும் எதிர்த்து போரிட்டு நாம் கொல்வோம். கங்கையைக் கடந்து அவர்களில் ஒருவரும் இராமர் இருக்குமிடம் செல்ல விட்டுவிடக்கூடாது! அப்படிநாம் அவர்களைப் போகவிட்டுவிட்டால் இந்த வையம் என்னை ''நாய்க்குகன்'' என்றே ஏசும். குகனும், அவன் கூட்டமும் இறந்தா போனார்கள் என்று பலரும் நம்மை பழித்துத் தூற்றுவார்கள்! இராமரால் ''தோழன்'' என்று ஏற்கப்பட்ட நான், வையம் கூறும் பழிச்சொல்லை ஏற்கவொட்டேன். உரிமை வாய்ந்த நாட்டை பறித்துக்கொண்டு நம் உயிரான இராமரைக் காட்டிற்கு அனுப்பினார்கள்! நாம் இராமருக்குக் கொடுத்த காடும் அவர்கள் கண்களுக்குப் பொறுக்கவில்லை. அவ்வளவு நல்ல

வர்களான அவர்களைக் கொன்று, இராமருக்கு பட்டாபிசேகம் செய்வித்து இராமருக்கு உரிய நியாயம் செய்தவர்கள் வேடுவர்களே என்ற புகழினை நாம் பெறவேண்டும். அந்த நல்ல கடமையை நிறைவேற்றுவோம் வாருங்கள்'' என்று வீர முழக்கம் செய்கிறான் குகன்.

குகனுடைய கோபாவேசத்தைச் சந்த நயத்துடன் வர்ணிக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் பாடல்கள் நமக்குப் படிக்கும்போதே வீராவேசத்தை உண்டு பண்ணுகின்றன.

''அஞ்சன வண்ணன்என் ஆருயிர் நாயகன்
ஆளாமே
வஞ்சனையால் அரசெய்திய மன்னரும்
வந்தாரே!
செஞ்சரம் என்பன தீயுமிழ்கின்றன
செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன்
என்றென்னை ஓதாரோ.''

''ஆழநெடுந்திரை ஆறுகடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும்
வில்லாளோ?
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு
சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றென்னை
ஏசாரோ''

''அருந்தவம் என்துணை ஆள இவன்புவி
ஆள்வானோ?
மருந்தெனின் அன்று உயிர் வண்புகழ்கொண்டு
பின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு
போகாதே
இருந்தது நன்று கழிக்குவன் என்கடன்
இன்றோடே''

''நின்ற கொடைக்கை என் அன்பன் உடுக்க
நெடுஞ்சீரம்
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தைஎன்
அம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை
கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்திடை
தூராதோ?''

''ஆடுகொடிப்படை சாடி அறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனும் இப்புகழ்
மேவீரோ
நாடு கொடுத்தஎன் நாயகனுக்கிவர் நாமாளும்
காடு கொடுக்கிலராகி எடுத்தது காணீரோ''.

கைகேயி இராமருக்கு மரவுரி தரிக்கக் கொடுத்துக் காட்டிற்கு அனுப்பினாள் என்பதை இலக்குவன் கூறக் கேட்டதிலிருந்து கைகேயி என்றால் குகனுக்குப் பெரும் வெறுப்பு. கைகேயியின் மேல் குகன் கொண்ட வெறுப்பே கைகேயியின் மகன் என்பதால் பரதனையும் அவன் வெறுக்க காரணமாகி விடுகிறது. பரதனைத் தன் பிள்ளையே போல் பாசம் காட்டி வளர்த்தவளுமான கோசலையே பரதனை முதலில் ஐயுற்றுப் பின் தன் ஐயம் தீர்ந்தாள் என்பதை நாம் பார்த்தோம். பரதனை இது காறும் நேரில் காணாதவனும், அவன் சிறந்த பண்பைப் பற்றி, அறியாதவனுமான குகன், இராமரைக் காட்டிற்கு விரட்டியது பரதனின்

## வெற்றி கொள்க

**கோபத்தை அன்பால் வெற்றி கொள்க**
**வெறுப்பை நட்பால் வெற்றி கொள்க**
**பொய்யை மெய்யால் வெற்றி கொள்க**
**தீயதை நல்லதால் வெற்றி கொள்க.**

**—ஸ்ரீ சத்ய சாயிபாபா**

சூழ்ச்சியே என்த் தீர்மானம் செய்தது ஒன்றும் அதிசயமில்லை.

''நின்ற கொடைக்கை என் அன்பன் உடுக்க
நெடுஞ்சீரம்
அன்று கொடுத்தவள் மைந்தன்''

என்பதுதான் பரதன்மேல் குகன் கொள்ளும் கோபத்திற்குக் காரணம் என்பதையும் கம்பர் இப்பகுதியில் நமக்குத் தெளிவுபடுத்தி விடுகிறார்.

பகைவர்களை மன்னிக்கும் பெருங் கருணையாளர் இராமர் என்பதைப் பரதனைப் போலவே குகனும்கூட அறிந்தே இருக்கிறான். ஆகவேதான் பரதனுடன் போர் புரியும் தன் முடிவை இராமர் அறிந்தால் கோபம் கொள்வார் என்பதையும் தெரிந்திருக்கும் குகன் ''இராமர் கோபித்தாலும் பரவாயில்லை— வீரர்களே! ஏழுகடலெனத் திரண்டு எதிர் நிற்கும் பரதனின் படையைக் கொன்று நீறுபடுத்துங்கள்'' என்றும் கூறுகின்றான்.

''மாமுனிவர்க் குறவாகி வனத்திடையே வாழும்
கோமுனியத் தகும் என்று மனத்திறை
கொள்ளாதே
ஏமுனை உற்றிடில் ஏழுகடற்படை என்றாலும்
ஆமுனையிற் சிறுகூழென இப்பொழு
தாகாதோ''

என்பது குகன் கொள்ளும் முடிவு.

பசுஉண்ண முற்பட்டால் பைங்கூழ் அழிவது திண்ணம். அதுபோலவே தன்னிடம் பரதனின் படை தோற்றழிந்து படுவதும் திண்ணம் என்று கூறி குகன் ஒரு பெரிய யுத்தத்திற்கு ஏற்பாடு செய்கிறான். இதே நேரத்தில் கங்கையின் வடகரைக்கு வந்து சேர்ந்துவிடுகின்றன பரதனின் சேனைகள். ''வடகரையில் தன்னுடன் ஒரு பெருஞ்சேனை, தென்கரையிலும் எனை எதிர்கொள்ள ஒரு பெருஞ்சேனையா?'' என்று பரதன் வியந்து நோக்கும் அதே நேரத்தில் குகனை யார் என்று பரதனுக்கு எடுத்து விளக்குகிறான் சுமந்திரன்.

''கங்கைஇரு கரையுடையான் கணக்கிறந்த
நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவன்
உயர்தோளான்
வெங்கரியின் ஏறனையான் விற்பிடித்த
வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனெனும்
குறியுடையான்''

கற்காணுந் திண்மையான் கரைகாணாக்
காதலான்
அற்காணிற் கண்டனைய அழகமைந்த
மேனியான்
மற்காணும் திருநெடுந்தோள் மழைகாணும்
மணிநிறத்தாய்
நிற்காணும் உள்ளத்தான் நெறிஎதிர்நின்றனன்
என்றான்''

''குகன் இந்தக் கங்கையாற்றின் இரண்டு கரைகளுக்கும் சொந்தக்காரன். அளவில்லாத படகுகளை உடையவன். மலையொத்த தோள்களும் கரியஎழில் மேனியும் கொண்ட அக்குகன் உங்கள் குலத்தில் தோன்றிய ஒப்பற்ற தலைவனான இராமருக்கு உயிர் நண்பனும் ஆவான்'' என்று சுமந்திரன் குகப்பெருமானின் இராம பக்தியைப் போற்றி உரைக்கின்றான்.

''அமைச்சருக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்'' என்பர் ஆன்றோர். அயோத்தியின் எல்லை அளவிலேயே இராமரைக் கானகம் போகவிட்டு வெற்றுத்தேருடன் சுமந்திரர் அயோத்திக்குத் திரும்பிவிட்டாரே! அவருக்குக் குகனைப் பற்றிய விவரங்கள் எப்படித் தெரியும் என்ற ஓர் ஐயம் இங்கே சிலருக்கு ஏற்பட நியாயம் உண்டு; தசரதரின் தலைமை அமைச்சரான சுமந்திரர் இராமரின் ஆணைக்கிணங்கவே அயோத்திக்குத் திரும்பிவிட்ட போதும், தக்க தூதர்களை அனுப்பிக் கங்கைக்கரையில் குகன் இராமரைத் தரிசித்து உபசரித்தது முதலானவற்றை விவரமாக அறிந்து கொண்டிருக்கிறான் என்பதை நாம் இங்கே தெளிந்து கொள்ள வேண்டும். ஆகவே தான் குகனை ''உங்கள் குலத்தனிநாதற்கு உயிர்த்துணைவன்'' என்று பரதனுக்கு விளக்குகிறான் சுமந்திரன்.

சுமந்திரனும் பரதனும் தன்னை நோக்கி ஏதோ பேசிக்கொள்வதைக் குகனும் இப்பொழுது காண்கிறான். தூசிக் கூட்டம் அடங்கியிருப்பதால் இப்பொழுது வடகரையில் நிற்கும் பரதசத்ருக்கனர்களின் முகங்களைத் தெளிவாகக் காணவும் குகனால் முடிகிறது. கண்டதும் துணுக்கென்கிறது குகனின் திருவுள்ளம். மரவுரி தரித்த தவக்கோலத்தில் வந்திருக்கும் அவர்களைத் தவறாக உணர்ந்தது எவ்வளவு பெரிய குற்றம் என்பதைக் குகன் உணர்கிறான். ''வீரர்களே! அதோ எதிர்க்கரையில் நிற்கும் பரதன் அண்ணனுடன் போருக்கு வந்தவனாகத் தெரியவில்லை. இராமபிரானை பார்த்தது போலவே தோற்றத்திலும் இருக்கும் பரதன் மரவுரி தரித்திருக்கிறான். அருகில் நிற்கும் சத்ருக்கனன் அவனும் தோற்றத்தில் இலக்குவனைப் ஒத்திருக்கிறான்; அவனும் மரவுரி தரித்திருக்கிறான். இராமர் வந்து தென்திசையை நோக்கி அவர் தொழுவதையும் கண்ணீர் பெருக்குவதையும் காணும்போது கல்லும் கரைந்துருகிவிடும் போல் தெரிகிறது! இராமரின் திருமுக தரிசனம் ஒருமுறை கண்டவரும் தம்உள மாசெல்லாம் நீங்கிவிடுவர் என்றால், இராமருக்குப் பின்பிறந்த தம்பியரா தவறுசெய்வார்? தவறு அவர்கள் பால் இல்லை; தவறுபட உணர்ந்த யானே தவறுடையேன்'' என்று கூறித் தன் கைவில்லையும் கீழே போட்டு மனம் கலங்குகிறான் குகன், ''நீங்கள் இங்கு இருங்கள். நான் வடகரைக்குப் போய்அவர்கள் எதற்காக வந்துள்ளார்கள் என்பதைப்போய்த் தெரிந்து வருகிறேன்'' என்று கூறிப் புறப்படத் தயாராகிறான்.

''வற்கலையின் உடையானை மாசடைந்த
மெய்யானை
நற்கலைஇல் மதிஎன்ன நகையிழந்த
முகத்தானை
கல்கனியக் கனிகின்ற துயரானைக்
கண்ணுற்றான்
வில்கையினின்றும் இடைவீழ விம்முற்று
நின்றொழிந்தான்''

''நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்
அயல்நின்றான்
தம்பியையையும் ஒக்கின்றான். தவவேடம்
தலைக்கொண்டான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித்
தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ
பிழைப்பென்றான்''


''உண்டிடுக்கண் ஒன்றுடையான் உலையாத
அன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான்
குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்கள்
நெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயால் ஒருதனியே
தான் வந்தான்!


தான்மட்டும் ஒரு தோணியில் ஏறிச் செலுத்திக் கொண்டு பரதனிருக்கும் வடகரைக்கு வருகிறான் குகன். பரதனை நெருக்கத்தில் காணக் காண இராமராகவே பரதனை உணர்கிறது குகனின் அன்புள்ளம். அன்புருவான பரதனைப் பிழைபடவுணர்ந்த தன் குற்றம் தீர, பரதனின் திருவடிகளில்விழுந்து வணங்குகிறான் குகன். ''தனிநாதற்குயிர்த்துணைவன்'' என்று சுமந்திரனால் வர்ணிக்கப்பட்ட குகனை இராமராகவே எண்ணி குகனின் திருவடிகளில் விழுந்து வணங்குகிறான் பரதன். இருவரும் இறுகக் கட்டி தழுவிக் கொள்கிறார்கள். இராமர் வயப்பட்ட இரு உள்ளங்களின் அன்பு சங்கமமாகத் திகழ்கிறது குகனும் பரதனும் கட்டித் தழுவிக் கொள்ளும் காட்சி. யாரை யார் முதலில் வணங்கினார், யார் காலில் யார் முதலில் விழுந்து வணங்கினார் என்பது ஒன்றும் தெளிவுறா வண்ணம் குகன் பரதன் இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கிப் பரவசத்தில் திளைத்ததை மிக அற்புதமாக வர்ணித்திருக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''வந்தெதிரே தொழுதானை வணங்கினான்
மலரிருந்த
அந்தணனும் தனைவணங்குமவன் அவனடி
வீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினான்
தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும்
கீர்த்தியான்''


—தொடரும்


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,






திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற பாலாலயம் விழாவில் ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டார்கள். திருவொற்றியூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு பழநிசாமி அவர்களும் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். துணை ஆணையாளர் திரு கு.சிதம்பரம் பி.ஏ. அவர்களும்;. பரம்பரை அறங்காவலர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், மற்றும் நிர்வாக அதிகாரி திரு தேனையா உடன் உள்ளார்கள்.







சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயத் திருக்குட நீராட்டு விழா அண்மையில் சிறப்புற நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.பி. கந்தசாமி எம்.ஏ., அவர்களும், ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். துணை ஆணையாளர் திரு வி.குணசேகரன் பி.ஏ.பி.எல். உடன் உள்ளார்.